பேராசிரியர் செ. யோகராசா

# ஈழத்து முச்சந்தி இலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து முச்சந்தி இலக்கியம்


மட்டக்களப்பு மாநகர சபை
உள்ளூராட்சி வாரம் - 2014

கல்வி மற்றும் நூலக அபிவிருத்தி தினம்
21.06.2014
மாநகர ஆணையாளர்
திரு.மா.உதயகுமார்
அவர்களின் தலைமையில் இடம்பெற்ற
"வீட்டுக்கொரு நூல், நாட்டுக்கொரு நற்பிரஜை"
எனும் வேலைத்திட்டத்தின்
திரு/திருமதி/செல்வி
ஸ்ரீ. மைக்கல் கொலின்
அவர்களிடமிருந்து இந்நூல் அன்பளிப்பாகப்
பெறப்பட்டது.

90, Bar Road,
Batticaloa



வெளியீடு :
மகுடம் பப்ளிகேஷன்ஸ்
90, பார்வீதி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து முச்சந்தி இலக்கியம்

ஆசிரியர் : பேராசிரியர் செ. யோகராசா, எம்.ஏ, பி.எச்.டி
முதற் பதிப்பு : 2013 ஒக்டோபர்
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
வெளியீடு : மகுடம் பப்ளிகேஷன்ஸ்,
90, பார்வீதி, மட்டக்களப்பு
அச்சுப்பதிப்பு : வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி,
மட்டக்களப்பு. +94 (0) 65 222 7170
அட்டைப்படம் : மைக்கல் கொலின்
வடிவமைப்பு : நோ. பிரதீபன் (வணசிங்கா பிரிண்டர்ஸ்)
ரூபா : 200/=

## Eelaththu Muchchanthi Ilakkiyam

**Author :** Professor S.Yogarajah, MA, Phd.
Eastern University, Sri Lanka.
**First Edition :** 2013 October
**Copy Right :** To Author
**Pubilished by :** Magudam Publication Pvt (ltd),
90, Bar Road, Batticaloa.
**Printed by :** Wanasinghe Printers, Trinco Road,
Batticaloa. +94 (0) 65 222 7170
**Cover :** Micheal Collin
**Design :** N. Pratheepan (Wanasinghe Printers)
**Price :** Rs. 200/=
**ISBN:** 978-955-44939-0-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முச்சந்தி இலக்கியப் பாதையிலே பயணித்து
அண்மையில் காலமாகிய
வட்டக்கொடை **கபாலி செல்லனுக்கு**
இந்நூல் சமர்ப்பணமாகின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | - | iv |
| அணிந்துரை | - | vii |
| புதுவகையான பாடல் மரபு | - | 01 |
| பாடுபொருள் | - | 07 |
| வரலாற்று முக்கியத்துவம் | - | 78 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்நூல், தமிழில் அண்மைக்காலமாகவே கவனத்திற்குள்ளாகி வருகின்ற – 'முச்சந்தி இலக்கியம்' முதலான பல பெயர்களில் அழைக்கப்படுகின்ற – புதிய தொரு இலக்கிய வகை சார்ந்தது. ஈழத்தில் இத்துறைபற்றி பேராசிரியை மௌ. சித்ரலேகா, பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி சி. ஜெயசங்கர் ஆகியோர் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றனர். முன்னாள் மாணவரும் இந்நாள் விரிவுரையாளருமாகிய திரு. சந்திரசேகரம் இப்பொருள் பற்றியே தமது பட்டப்பின் படிப்பு சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். நீண்ட காலத்திற்கு முன்னரே இத்துறை சார்ந்த முதற் தொகுப்பு நூலொன்றினை 'ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு' (2002) என்ற மகுடத்தில் நான் வெளியிட்டிருப்பினும், இந்நூல் இத்துறை சார்ந்து ஈழத்தில் வெளிவருகின்ற முதன் நூலாகின்றது. ஈழத்து முச்சந்தி இலக்கியத்தின் முக்கியத்துவம் பற்றிச்சுருக்கமாக அறிமுகம் செய்வதே இந்நூலின் முக்கியமான நோக்கமாகின்றது. விரைவில் விரிவாக்கம் செய்கின்றபோது உங்களது ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

'இத்தருணம்' இவ்வாறானதொரு நூலினை வெளியிடத் தூண்டிய படைப்பிலக்கியவாதியும் நண்பருமான அஜந்த குமார் அவர்களை நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். நூல்வெளியீட்டு முயற்சிக்கு அதிக ஒத்துழைப்பு நல்கிய இனிய நண்பர் மைக்கல் கொலின் அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். இறுதிக் கணத்து நூற்தேடல்களின்போது பேருதவிகள் புரிந்த பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, மு.சிவலிங்கம், ஹனீபா, சாரல் நாடன், பரமசிவம், ராஜேந்திரன், ஆசிரியர் ஏகாம்பரநாதன் க.தேவராசா, நூலகர் ஜெயராஜ், முல்லைமுஸ்ரீபா, பெ.முத்துலிங்கம், லெலின் மதிவானம், சு.முரளிதரன், கலாநிதி அகளங்கன், அன்ரனி ஜீவா ஆகியோரையும் மறப்பதற்கில்லை.

எனது நூல் வெளியீடு பற்றிய கனவு கண்டதாகக் கூறி எனக்கு முதல் உற்சாகமளித்த மகள் யோ. சுவஸ்திகாவுக்கும் மனமார்ந்த நன்றிகள்! எப்போதுமே இத்தகைய முயற்சிகளை முழுமனதோடு வரவேற்கின்ற துணைவி திலகியையும் நினைத்துப்பார்க்கின்றேன் மிக குறுகிய காலத்தில் எனது ஆக்கத்தை நூலுருவில் தந்துதவிய வணசிங்கா பிரிண்டர்ஸ்க்கும் மனப்பூர்வமான நன்றிகள்!

பேராசிரியர் செ. யோகராசா

மொழித்துறை

கிழக்குப்பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் வழங்கிய அணிந்துரை

### தமிழில் கவனிக்கப்படாத ஒரு இலக்கிய வகை: எழுத்து நிலை பெற்ற வாய்மொழிப் பாடல் (Semi Oral) மரபு

எம்மிடையே இப்போது எழுதப்பட்ட - ஆனால், வாய்மொழியாக கையளிக்கப்படுகின்ற சில பாடல்கள் உள்ளன, எழுதப்பட்டு, அச்சடிக்கப்பட்டு ஆனால், இவற்றினுடைய பயில்நிலையில் அவை பெரும்பாலும் வாய்மொழியாகக் கையளிக்கப்படுகின்றன. அல்லது துண்டுப் பிரசுரங்களாக விற்கப்படுகின்றன. இவற்றினை ஆங்கிலத்தில் Semi Oral Text என்பர். 'ஓரளவு வாய்மொழிப் பாடல்கள்' அல்லது 'பாதி வாய்மொழிப் பாடல்கள்' என்பர். இவற்றினை எவ்வாறு விளங்கிக் கொள்வது என்பது முக்கியமான ஒரு விடயமாகிறது. மேற்கூறியவற்றை நாம் முற்றுமுழுதாக நாட்டார் வழிப்பட்ட பாடல்களோடு சேர்த்துவிட முடியாது. ஏனென்றால், நாட்டார் பாடல் நிலைக்குள்ள, ஆசிரியர் தெரியாமை அல்லது ஒட்டுமொத்தக் கூட்டுநிலை ஆசிரியர் தன்மை இங்கு காணப்படவில்லை. இங்கு குறிப்பிட்ட ஒருவர் - கவிஞர் அல்லது புலவர் - எழுதுவார். சிலவேளை அவரே அதனை மக்களுக்கு முன்னால் வாசிப்பார். இன்றேல் சிலர் வாங்கி வாசித்துக் காட்டி விற்பார்கள். ஆகவே, உண்மையில் இதனுடைய தொடர்பு வலு என்பது வாய்மொழி நிலைப்பட்டதுதான்.

இவ்வாறான (Semi Oral) ஓரளவு வாய்மொழி அல்லது அரைவாய்மொழிப் பாடல்கள் நமது பாரம்பரியத்தில் இல்லாமல் இல்லை. ஆனால் நாம் எமது இலக்கிய வரலாற்றை எழுதிய முறையிலும் பேணிய முறையிலும் அந்த வரலாற்றுக்குரிய பொருள் யாது அல்லது யாவை எனக் கருதிய முறையிலும் ஒரு பெரும்படியான தமிழ் எழுத்துமரபு, பாடல் மரபு ஆக அதற்குள் இவை வரவில்லை என்பதனை நாம் பல இடங்களில் வற்புறுத்தி வந்துள்ளோம். ஒரு நிலையில் தமிழில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப எழுத்துக்கள் என்பன - பாடல்களாக - செய்யுள்களாக அமைந்துள்ளன. கப்பல் சாத்திரம், மருத்துவம் போன்ற பாடல்கள் எம்முடைய வரன்முறையான இலக்கிய வரலாற்றில் பேசப்படுவதில்லை. மேலும் எமது இலக்கிய வரலாற்றில் இடம்பெறுகின்ற இலக்கியங்கள் எல்லாமே ஏதோ ஒரு வகையில் யாரோ ஒருவரால் ஏதோவொரு சமூக அதிகாரத்துடன் சம்பந்தப்பட்டவர்களால் சேகரிக்கப்பட்ட - கோவை செய்யப்பட்ட இலக்கியங்களாகவே அமைந்துள்ளன. அவை பத்துப்பாட்டு எட்டுத் தொகையாய் இருப்பினும் சரி. பதினெண் கீழ்க்கணக்காய் இருப்பினும் சரி திருமுறைகளாக இருப்பினும் சரி பாசுரங்களாக, நாலாயிரத் திவ்விய பிரபந்தமாக இருப்பினும் சரி ஐம்பெரும் காப்பியங்களாக இருப்பினும் சரி இந்த மரபு ஏறத்தாழ அரசசபை இலக்கியங்கள் அல்லாத மற்ற இலக்கியங்களில் பிரித்தெடுப்பிற்கு கொண்டு வரும் தன்மையை நாம் காண்கின்றோம். தேவாரம் முதலான பாசுரங்கள் அவை பாடிய காலத்தில் தொகுக்கப்படாமல் பின்னர் அவற்றுக்கான ஒரு சமூக பண்பாட்டுத் தேவை ஏற்பட்ட பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் படிப்படியாக தொகுக்கப்பட்டு குறிப்பாக நாதமுனி காலத்திலும் நம்பியாண்டார் நம்பி காலத்திலும் முழுமை பெற்றன என்பதனை நாம் அறிகின்றோம். எனவே, இந்த தொகுக்கப்பட்ட பெரும்பாலான நூல்களில் எல்லா வகை இலக்கியங்களும் இடம்பெறவில்லை என்பதற்கு தொல் காப்பியத்தில் செய்யுள் இயலில் வருகின்ற நூல் பற்றிய சூத்திரம் நல்ல உதாரணமாகும். அந்தச் சூத்திரத்திலே பிசி, முதுமொழி என்கின்ற பல விடயங்களைச் சொல்வார் தொல்காப்பியர். அதிலே பிசி என்பதனை நொடி அல்லது விடுகதையென சிலர் கூறுவார்கள். எமக்குப் பழமொழிகள் ஒரு தொகுதியாக உள்ளன. ஆனால் பொதுவான பழமொழிகள் எம்மிடத்தில் இல்லை.

மேற்கூறிய நிலை 14ஆம் நூற்றாண்டு அல்லது அதன் பின்னர் சற்று மாறுகின்றது. விஜயநகர நாயக்கர் காலம் என்று பொதுப்படையாக இலக்கிய மாணவர்கள் அறிந்து கொள்கின்ற இந்தக் காலப்பகுதியில் பல்வேறு வகையான இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றுக்கள் தென்படுகின்றன. ஒன்று, பிற மதங்களான கிறிஸ்தவ, இஸ்லாத்தின் வருகை. இவற்றைவிட சைவ, வைணவ மரபிற்கு புறம்பாகவிருந்த ஆனால் உள்நாட்டிற்குரியதான சித்தர் மரபு. அவற்றுடன் இக்கால அரசியல் மாற்றங்கள் காரணமாக ஏற்பட்ட புலமை வேறுபாடு காரணமாக வந்த நாட்டார் நிலைப்பட்ட பாடல் மரபுகளைக் கொண்ட பள்ளு, குறவஞ்சி போன்றவை இவற்றினூடே இன்னொரு வகை இலக்கியங்களும் பாடல்களும் படிப்படியாக வளரத் தொடங்குவதைக் காணலாம். அவற்றைத்தான் இன்று 'பெரிய எழுத்து தொடர் நூல்கள்' என்று நாம் கூறுகின்றோம். இவ்வரிசையில் புலேந்திரன் களவு, நல்லதங்காள் கதை, கோவலன் கதை, மதனகாமராசன் கதை, தமிழறியும் பெருமாள் கதை, விக்கிரமாதித்தன் கதை போன்றவை அடங்குகின்றன. இவற்றில் பலவற்றைப் புகழேந்திப் புலவர் எழுதியதாகச் சிலர் சொல்வார். இவற்றிக்கும் இந்தப் புகழேந்திக்கும் என்ன உறவு இருக்கின்றது என்பது பற்றியும் சில நாட்டார் நிலைக்கதைகள் கூட உள்ளன. ஆனால் இவை நிச்சயமாக வாய்மொழிப் பாடல்கள்; வாய்மொழியாக வந்தவை.

இவற்றினை பெரிய எழுத்துக்களிலே ஏன் அச்சடித்தனர் என்பது ஒரு சுவாரசியமான வரலாறு. ஏனென்றால், இந்த புதிதான எழுத்தினைக் கற்கின்றவர்கள் அதாவது எழுத்திற்கு அதிகம் பரிச்சயம் இல்லாதவர்கள் அவற்றை வாசிக்கின்ற பொழுது அந்த எழுத்துக்கள் (size of the letters) பெரிய எழுத்தாக இருத்தல் வேண்டும் என்பது உலகப் பொதுவான ஒன்றாகும். அதனாலேதான் நாங்கள் சுவர்களிலே ஒட்டுகின்ற விளம்பரங்கள் அல்லது பொதுவான விளம்பரங்களை எல்லாம் பெரிய எழுத்துக்களில் போடுவது வழக்கமாக உள்ளது. இந்தப் 'பெரிய எழுத்து' என்பதற்கு தமிழிலும் அத்தகைய கருத்துத்தானுண்டு. ஆனால் ஓலையிலே எழுதுகின்ற பொழுது அப்படிப் பெரிய எழுத்து, சின்ன எழுத்து என்கின்ற மரபு இருக்காது. அது அச்சிலே வருகின்ற பொழுதுதான் ஏற்படுகின்ற ஒரு மரபு. இந்தப் பாடல் மரபு வரத்தொடங்கிய பொழுது நான் முன்னர் குறிப்பிட்ட Semi Oral Text, தமிழில் எங்களுடைய இலக்கியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியத்தில் ஓர் அங்கமாக வருவது நிச்சயமாகின்றது. இத்தகையை மரபு ஒரு வளமான பகுதியாக அமைகின்றது.

மேற்குறித்த பாடல் மரபினைப் பார்த்தோமானால் இதில் சங்க இலக்கியத்திற்குச் சொல்லப்படுகின்ற - வாய்ப்பாடல் மரபிற்குரிய பண்புகளென்று கைலாசபதி சொல்லுகின்றவற்றுள் பெரும்பாலானவற்றைக் காணலாம். உதாரணமாக பல இடங்களில் குறிப்பிட்ட சில வரிகள் மாறி மாறி வரும். உதாரணமாக சீதனங்களைப் பற்றிச் சொல்லுகின்ற பொழுது 'அந்தச் சீதனம் இந்தச் சீதனம்' என்று சொல்லிவிட்டு 'இன்னுமுண்டு சீதனங்கள் எங்கள் இளங்கொடிக்கு' என்று ஒரு வரிவரும். பின்னர் நல்லதங்காளைப் பாடச் சொல்லி 'ஆரணங்கு ஏது சொல்வாள்' அல்லது 'ஆணழகர் ஏது சொல்வார்' என்று வேறொருவரி வரும். இப்படியானதொரு (Formula) வாய்ப்பாட்டு நிலையை அந்தப் பாடலிலே காணலாம். இந்த மரபினை நாம் சேர்த்துக் கொள்வோம்.

இலக்கிய வரலாற்று மரபுநிலை இதுவாக, ஈழத்து இலக்கிய வரலாற்றினை எடுத்துப் பார்த்தால் இப்படியான விடயங்களைப் பாடுகின்ற ஒரு மரபு இருப்பதனை நான் இளைஞராக இருந்த காலத்தில் நிலவியதனை எனது கண்ணால் கண்டிருக்கிறேன். எனது கிராமமாகிய கரவெட்டியைச் சேர்ந்த J.S. ஆழ்வாப்பிள்ளை என்ற கிறிஸ்தவக் கவிஞர் - அவரைக் கட்டையாழ்வார் என்று சொல்வார்கள் - இத்தகைய பாடல்களைப் பாடுவது வழக்கம். 'இத்தகைய பாடல்களைப் பாடுவது' என்கின்ற பொழுது அந்த ஊரிலே உள்ள முக்கியமான சம்பவம், விசேடமான சம்பவம் என்பவற்றைப் பாடுவது அல்லது அந்த ஊரிலே நடந்த ஒரு முக்கியமான கொலைவழக்கு அல்லது ஒரு பெரிய பரபரப்பான வழக்குப் போன்ற பல விடயங்களை இத்தகைய புலவர்கள் பாடுவது வழக்கம். உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருக்கும் காலத்தில் - நான் நம்புகின்றேன். எனக்குப் பத்துப் பதினொரு வயது இருக்கின்ற காலத்தில் (நான் 1932 ஆம் ஆண்டு பிறந்தவன்) - அப்போது 1942, 1943 ஆக இருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன். உலகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் விளைவாக பொருட்களின் விலையெல்லாம் ஏறிவிட்டது. "சுன்னாகச் சந்தையிலே துடை மொத்தம் ஒரு கிழங்கு; சொல்லுவன் சேதியைக் கேளடி சேதியக்கை" என்றுதான் அந்த வரிவரும். 'சேதம்மா' 'சேதுப்பிள்ளை' என்று எம்முடைய கிராமத்திலுள்ள பெண்களுக்குரிய பொதுவான பெயர். அப்போது இந்தப் பாடல் மரபு இருந்தது. இந்தக் கட்டையாழ்வார் என்று சொல்லப்படுகின்ற ஆழ்வாப்பிள்ளை அவர்கள் இதிலே பிரபலமானவர். அவர் வேறு சில பாடல்களும் எழுதியிருக்கின்றார். இன்னொரு புலவர் பாடியதை கடதாசித் துண்டுகளிலே அச்சடித்து வாங்கி கோயில் திருவிழாக்கள் போன்ற, ஆட்கள் கூடுகின்ற இடங்களில் பாடி அந்த நோட்டீஸ் ஒன்றை இரண்டு சதம் அல்லது ஐந்து சதத்திற்கு விற்பார்கள். ஒரு நீட்டுத் துண்டாக அது இருக்கும். எனவே இந்த ஒரு மரபு இருந்து வந்தது எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

சிங்களத்தில் இந்த மரபு மிகமிக முக்கியமான மரபாக இருந்து வந்திருக்கின்றது. 'கொள கவி காறயா' என்று சொல்வார்கள். 'கொள' என்று சொல்வது ஒரு தாள். இவர்கள் தங்களுக்குள்ளே பாடல்கள் பாடி அந்தப் பாடல்களை விற்று வந்துள்ளனர். அத்தகைய பாடல்களிலே முக்கியமான விடயங்களைப் பேசுவது வழக்கம். அப்படியானவர்கள் நல்ல பேச்சாளர்களாக மாறுகின்ற தன்மையும் உண்டு. 56இல் சிங்களச் சட்ட மூலத்தோடு வந்த சமூகப் புரட்சியின் ஊடாக தென்னக் கோன் என்று சொல்லப்படுகின்ற ஒரு சிங்களக் கவிஞர் அரசியலுக்குள் வந்தார். அவர் கலாசார மந்திரியாக இருந்தவர். அவர் இப்படியானதொரு கவிமரபினைச் சேர்ந்தவர். 'கொள கவி காறயா' என்றுதான் அவரைப் பற்றிச் சொல்வார்கள். இந்த மரபு சிங்கள மக்களிடையேயும் உண்டு என்பதுதான் நமது கவனத்துக்குரியது.

தமிழ் நாட்டிலேயும் இந்த இலக்கிய மரபு காணப்படு கின்றது. ரகுநாதனுடைய 'சமுதாய இலக்கியம்' என்கின்ற தொகுதியைப் பார்க்கின்ற பொழுது தமிழ் நாட்டில் இப்படியாகப் பாடி மகிழ்விக்கின்ற பாடல் மரபு ஒன்று இருந்ததற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடயங்கள் பலவற்றை அவர் அதிலே கூறுவது எனக்கு ஞாபகம் வருகின்றது. அங்கு முக்கியமான வழக்குகள், விடயங்கள் பற்றி அந்த ஊர்ப் புலவர்கள் பாடுகின்ற ஒருமரபு உண்டு. அரசியல் கட்சிகள், சுதந்திர இயக்கங்கள் வந்த பொழுது அத்தகைய புலவர்கள் மூலமாக அரசியல்வாதிகள் தங்களுடைய கட்சி சார்ந்த அல்லது இயக்கம் சார்ந்த அல்லது சமூகக் கருத்துச் சார்ந்த பாடல்களைப் பாடுவிக்கின்ற ஒரு மரபு இருந்து வந்தது போலத் தெரிகின்றது.

மேற்கூறியவாறாக கிராமம் கிராமமாகச் சென்று பாடி மக்களை மகிழ்வித்து அதனூடாகச் சமூகக் கருத்துக்களைப் பரப்புகின்ற ஒரு பாரம்பரியம் மிக வலுவாகத் தமிழ்நாட்டில் நிலவியது என்பதற்கு இளையராஜாவினுடைய சகோதரரான பாவலர் வரதராஜனுடைய குழு மிக முக்கியமான சான்றாகின்றது. இக்குழுவில் இளையராஜாவும் ஆர்மோனியம் வாசிப்பவராக இருந்தார். இவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று பாடுவார்கள். இவர்களை பொதுவுடைமை இயக்கங்கள் பயன்படுத்தின. இத்தகைய பின்னணியில் பல இடங்களுக்கும் சென்று சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பாடினார்கள் என்று சொல்வதற்கு நேரில் கண்ட பலர் இன்றும் எம்மிடையே இருக்கிறார்கள்.

இன்னொரு மரபும் உண்டு. அதாவது அந்தக் காலத்து நாடக மேடைகளில் மிகப் பிரபலமான பாடல்களை எடுத்து அந்தப் பாடல்களின் மெட்டில் சமூக முக்கியத்துவம் உள்ள - சனரஞ்சகமுள்ள விடயங்களைப் பாடல்களாகப் பாடுகின்ற மரபே அது. இதிலே ஒரு சுவாரசியம் என்னவென்றால் அந்தக் காலத்து 'ஸ்பெசல் நாடக' மரபிலே நாடகத்தின் இரண்டு சீன்களுக்கிடையே நாடக நடிகர் ஒருவர்வந்து சமூகம் சம்பந்தமான அல்லது சமகாலம் சம்பந்தமான ஒரு பாடலை மேடையில் பாடிவிட்டுச் செல்கின்ற மரபு இருந்தது. இப்படியாகப் பாடிய சூழலிலேதான் இந்தியச் சுதந்திரம் பற்றிப் பல பாடல்கள் வந்தன என்று நாங்கள் அறிகின்றோம். இத்தகைய பாடல் மரபு தமிழ் நாட்டு ஸ்பெசல் நாடகங்கள் இங்கு நடிக்கப்பட்ட பொழுது இங்கு இருந்தது என்பதனை நான் எனது அனுபவத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிருக்கின்றேன். எங்கள் ஊர்களிலே அல்லது அயல் ஊர்களிலே நாடகங்கள் நடிக்கின்ற பொழுது நாடக நடிகர்கள் இடைக் காட்சிகளில் வந்து பொதுவான விடயங்களைப் பற்றிப் பாடுவார்கள் அது பொதுவாகச் சுதந்திரத்தினைப் பற்றிய - இந்திய சுதந்திரத்தினைப் பற்றிய பாடல்களாக இருக்கும்.

பாரதியாருடைய பாடல்களை எடுத்துப் பார்த்தீர்களானால் கருத்துப் பரவல்களுக்காக அவர் பாடியுள்ள பல பாடல்கள் குறிப்பாகச் சுதந்திரம் பற்றியுள்ள பாடல்கள் ஏதாவது பிரபலமான ஒரு பாட்டின் வர்ணமெட்டு என்கின்ற குறிப்போடு வருவதனை நீங்கள் அவதானிக்கலாம். இதிலிருந்து பாரதியார் கூட இந்த 'அரை வாய்மொழிப் பாரம்பரிய'த்தினை நன்கு கையாண்டிருக் கின்றார் என்பது விளங்குகின்றது. அவர் திருவல்லிக்கேணி சார்ந்த கடற்கரையில் உரையாற்றுவதும் பாட்டுப்பாடுவதும் சுதந்திரத்தினைப் பற்றிய கருத்துக்களைச் சொல்வதற்காக இவற்றினைப் பயன்படுத்துவதும் உண்டு என்று அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள் கூறியுள்ளார்கள். இந்திய வானொலியில் கூட இத்தகைய வாய்மொழி மரபு விட்டகுறை தெட்ட குறையாக இயங்கிக் கொண்டு வருகின்றதனை நாங்கள் காணுகின்றோம்.

இவற்றினை விட, எமது பாரம்பரியத்திலே வேறுசில பாடல்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக 'வழிநடைச்சிந்து' உள்ளது. இவையெல்லாம் உண்மையில் யாரோ ஒரு புலவரினால் எழுதப்பட்டு அவர்கள் எல்லோரும் சேர்ந்து பாடுகின்ற முறைமையிலே வந்திருத்தல் வேண்டும். இந்த முறைமைதான் - இந்தப் பாடல் மரபுதான் - மிகமிக முக்கியமானது. இதனூடாகப் பேச்சு மொழியினுடைய வளர்ச்சியினை - அவ்வக்காலத்து சமூகத்தில் முக்கியத்துவம் பெற்ற விடயங்களை நாங்கள் அறியக்கூடியதாய் இருக்கின்றது.

இன்னொரு விடயத்தினை நாம் மிக நுணுக்கமாக நோக்க வேண்டும் என்று நான் நம்புகின்றேன். தமிழ் இலக்கியத்தின் தொடக்க காலமாகிய சங்க காலத்தினைப்பற்றிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்ற பொழுது அதிலே உள்ள முக்கியமான அம்சம் என்னவென்றால் இந்தக் கற்றறிந்த புலவர்கள் மாத்திரம் அல்லாமல் 'கல்லாவாய் பாணர்'களும் அதாவது புலவர்களைப் போன்ற கல்வி அறிவு பெறாத பாணர்களும் இந்தப் பாடல்களைப் பாடினார்கள். அரச சபையிலே மன்னர்களையும் அவர்களுடைய சுற்றத்தாரையும் மகிழ்விப்பதற்குப் பாடினார்கள் என்பதனை நாம் அறிகின்றோம். இந்தப் பாணர் மரபு அதிகம் பேசப்படவில்லை. சங்க இலக்கியத்துக்குள்ளே பிற்காலத்தில் பாணர் மரபு நிராகரிக்கப்படுவதனை நாங்கள் நெடுநல் வாடை போன்ற பாடல்களுக்கூடாகக் காண்கின்றோம். கேட்டறிகையிலே வருகின்றபொழுது நான் முன்னர் கூறியது போல பாணரை 'கல்லாவாய் பாணர்' என்கின்ற தன்மைவந்து விடுகின்றது. இந்தப் பாணர் மரபு சங்க இலக்கியத்தின் பிற்கூற்றிலும் அதனைத் தொடர்ந்தும் வருகின்றது. அத்தகைய சூழலில் பரத்தையருக்கு ஆட்சேர்க்கின்ற அல்லது அவரோடு சம்பந்தப்பட்ட ஒருவராகவே அவர்கள் காணப்படுகின்றார்கள். அவர்களது நிலை எத்தகையதாய் இருந்தாலும் கூட இந்தப் பாடலைப் பாடுகின்ற ஒரு மரபு - பாடிப் பிழைக்கின்ற ஒரு மரபு - இருந்துள்ளது போலத் தெரிகின்றது.

மேற்கூறிய பாரம்பரியத்தின் வளர்ச்சிதான் அல்லது உருமாற்றந்தான் இந்த அச்சுப்பிரதியினைக் கொண்ட, ஒருவரால் எழுதப்பட்ட - ஆனால் அதேவேளையில் பலருக்கு எடுத்துக் கூறப்பட்ட அந்தப் பாடல் பிரதியாகும். இப்படியான பாடல்கள் தொகுக்கப்படுவது மிகமிக முக்கியம் என்றே நான் கருதுகின்றேன். இந்தப் பணியினை மேற்கொண்டுள்ள எனது மாணவ நண்பரான யோகராசாவிற்கும் அவரை அத்துறையிலே தூண்டிய மற்றைய நண்பர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

(பி.கு:- ஈழத்துவாய்மொழிப் பாடல் மரபு என்ற எனது தொகுப்பு நூலிற்கு 2002ல் பேராசிரியர் வழங்கிய முன்னுரை பொருத்தம் கருதி இந்நூலிலும் இடம்பெறுகின்றது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் : ஒன்று
# புதுவகையான பாடல் மரபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழத்து நவீன கவிதை' தொடர்பான கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டிருந்த வேளையிலே புதுவகையான வாய்மொழிப் பாடல் மரபொன்றினை என்னால் அவதானிக்க முடிந்தது. ஏற்கனவே அறியப்பட்ட வாய்மொழிப் பாடல் (நாட்டார் பாடல்) மரபு ஆசிரியர் தெரியாத நிலையிலும் ஒட்டுமொத்தக் கூட்டு நிலையிலும் வெளிப்பட்டுள்ளது. மாறாக இம் மரபு தனி ஒரு கவிஞரால் (ஆசிரியர் பெயர் தெரியும்) வாய்மொழியாக பாடப்பட்டு வந்துள்ளது; அச்சு வந்த பின்னர் சிறு பிரசுரங்களாக வெளிவந்துள்ளது; வெளிவருகின்றது.

மேற்குறித்த வாய்மொழிப் பாடல் மரபினை semi oral text என்று குறிப்பிடுகின்றார் பேராசிரியர் கா. சிவத்தம்பி. ஓரளவு வாய்மொழிப் பாடல்கள் அல்லது 'பாதி வாய் மொழிப் பாடல்கள்' என்றும் கருதினார்; 'எழுத்து நிலைபெற்ற வாய்மொழிப் பாடல்' என்றும் எழுதினார். தமிழ் நாட்டில் முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி இம் மரபினை 'முச்சந்தி இலக்கியம்' என்று அழைத்து வருகின்றார் (2004); சந்தை, திருவிழா, வீதி, பாலம் முதலான பொது இடங்களில் பாடப்பட்டு வந்திருப்பது காரணமாக அவ்வாறாக அழைக்கிறார். இவ்வாறான மலையகப் பாடற் தொகுப்புகளை திரு. பொ. முத்துலிங்கம் 'மலையக முச்சந்தி இலக்கியம்' என்ற பெயரில் (2012) தொகுத்து வெளியிட்டார். சிலர், 'வீதிப் பாடல்கள்' என்பர். வேறுசிலர் Orature என்பர். எப்பெயரில் அழைக்கப்படினும் இவ்வகை சார்ந்த ஈழத்து வாய்மொழிப் பாடல்களை உள்ளடக்கிய எனது தொகுப்பு நூல் 'ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு' (2002) என்ற பெயரில் ஏற்கனவே வெளிவந்துள்ளது 'நூலுருப் பெற்ற பெரிய எழுத்துப் புத்தகம்' 'குஜிலி காலணா அரையணா பாட்டுப் புத்தகம்' என்ற பெயர்களிலும் இம் மரபுவழிப்பாடல்கள் அழைக்கப்பட்டு வந்துள்ளன என்பதும் வேங்கடாசலபதியின் கருத்து).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகை வாய்மொழிப் பாடல் மரபினை சங்க காலத்துப் பாணர் பாடல் மரபுடன் இனங் கண்டு அதன் தொடர்ச்சியாகக் காண்கின்றார் பேராசிரியர் கா. சிவத்தம்பி. பாணர்கள் அம் மரபினை புலவர்களிடம் கையளித்துள்ளனர் என்றும் அறிஞர் சிலர் கருதுவர். ஆயினும் அத்தகைய பாணர்கள் பின்னர் செல்வாக்கிழந்துவிட்டாரென்பது வேறு சிலரது கருத்து. பாணர்கள் செல்வாக்கிழந்திருப்பினும் அம் மரபு செல்வாக் கிழக்கவில்லை என்றும் அவ்வாறான வாய்மொழிப் பாடல்கள் எழுதப்படாதும் ஒரோ வழி எழுதப்பட்டிருப்பினும் பேணப்படாதும் போயிருக்கலாமென்றும் கருத வாய்ப்புள்ளது. எவ்வாறாயினும் இம் மரபு 'அணைந்த எரிமலை'யன்று; 'உறங்கு எரிமலை' என்றும் 'உயிர்ப்பு எரிமலை' என்றும் கூறுவதே பொருத்தமானது. ஏனெனில், பெரும்பாலும் சமூகத்தின் அடித்தளத்திலுள்ள புலவர்களால் பாடப்படுகின்ற இத்தகைய பாடல்கள் பொது மக்களிடம் கொண்டு செல்லப்படுகின்றன; பொது மக்களைக் கவர்கின்ற வலுவையும் வளத்தையும் கொண்டுள்ளன. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம், மலையகம் ஆகிய பிரதேசங்களில் இன்றும் இவ்வகையான பாடல்கள் பாடப்படுகின்றன.

ஈழத்தில் இத்தகைய மரபு மட்டக்களப்பு பிரதேசத்திலும் மலையகத்திலும் இன்று வரை உயிர்ப்புடனிருந்து வருகின்றது. நாட்டார் பாடல்களின் செல்வாக்கும் கூத்துப் பாடல்களின் செல்வாக்கும் இவ்வாறான பாடல்களை உள்ளடக்கிய தொகுப்பான தமிழ் நாட்டுச் 'சில்லறைக் கோவை' முதலான தொகுப்புகளின் வரவும், செல்வாக்கும் காலதாமதமாக ஏற்பட்ட நவீன மயவாக்கமும் மட்டக்களப்பிலே இம் மரபு உருவாகவும் உயிர்ப்புடனிருக்கவும் வாய்ப்பளித்துள்ளன. மலையகத்தைப் பொறுத்தளவிலே தமிழ் நாட்டினுடனான மிக நெருங்கிய பிணைப்பும் ஊடாட்டமும், நாட்டார் பாடல்கள், கூத்துப் பாடல்களின் செல்வாக்கும் 'குஜிலி' பாட்டுப் புத்தகங்களின் வரவும் இம் மரபின் ஆதிக்கத்திற்கு வாய்ப்பளித்து வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணர் வழிவந்த இவ் வாய்மொழிப் பாடல்களில் சங்க கால இலக்கியச் செல்வாக்கு அதிகமுண்டு. பேராசிரியர் க. கைலாசபதி சங்க இலக்கியப் பாடல்கள் வாய்மொழி இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு பிறந்தவை என்பதற்கு எடுத்துக்காட்டும் சான்றுகள் பலவும் இப் பாடல்களிலும் இடம் பெற்றள்ளன. (இவை தனி ஆய்விற்குரியவை). சங்க காலப் புலவர்கள் போன்று இம் மரபுசார் புலவர்களும் மருத்துவர், சோதிடர், அண்ணாவிமார், பூசகர், சலவைத் தொழிலாளர் கூத்தர் முதலாகப் பல தொழில் செய்பவர்களாகவும் காணப்படு கின்றனர் என்பது சுவாரஸ்யமான விடயமாகின்றது.

அந்தாதி வகைப் பாடல் மரபு தோற்றம் பெற்றமைக்கான காரணத்தைக்கூட இவ்வாய் மொழிப் பாடல் மரபிலிருந்து அறிய முடிகின்றது. அதாவது அந்தாதிப் பண்பானது பாட்டுக் கட்டுதல், நினைவில் சேமித்து வைத்தல், அநாயாசமாகப் பாடுதல் முதலான பல வசதிகளுக்கு வாய்ப்பளித்து வந்துள்ள தென்பதனை இவ் வாய்மொழிப் பாடல் உருவாக்கத்திலிருந்து உய்த்துணர முடிகின்றது. நண்பர் மு.சிவலிங்கம் அவர்கள் தாம் தொகுத்துள்ள மலையக நாட்டார் பாடல் தொகுப்பிலே 'பபூன்' பாடல்களையும் சேர்த்திருப்பது எனது சிந்தனையைக் கிளறியது. இத்தயை பபூன்கள் இட்டுக்கட்டிப் பாடுபவர்களாகவும் சபைக்கேற்ற விதத்தில் புதியன புனைபவர்களாகவும் இருப்பார்களாயின் - இருக்கின்றனர்- அவர்களது பாடல்களையும் ஏன் இம் மரபிலே சேர்க்கக்கூடாது என்றொரு நியாயமான வினா எழுந்த பின்னணியில் அவர்களது பாடலும் இங்கு கவனத்திற்குபட்டுள்ளது. எமது அறியாமையாலும் அலட்சியத்தாலும் மரபார்ந்த சிந்தனைகளுக்கு அடிமையாகிப் போனமையாலும் 'பபூன்கள்' முகவரியிழந்து போய் விட்டனர் என்று கருதுகின்றேன். அவ்விதத்தில் அவர்கள் கோமாளிகள் என்று கருதப்படுவார்களாயின் நாமும் புலமையுலகக் கோமாளிகளாதல் கூடும்.

இவ்வாறே 'வழிநடைச் சிந்து' பற்றிய பேராசிரியர் அனஸ் அவர்களின் ஆய்வுகளும் 'கோலாட்டப் பாடல்க'ளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பாக வெளிவந்துள்ள இறக்காமத்தூர் பண்பாட்டுப் பாடல்களும் அம்பாறைப் பிரதேச முஸ்லீம் பெண்களது ஒப்பாரிப்பாடல்களும் இவ்வகை வாய்மொழிப் பாடல்வகைளை மேலும் விரிவுபடுத்துவதேடு இவ்வகைப் பாடல்களின் உருவாக்கம், நிலைபேறுடைமை பற்றியும் ஆய்வாளர்களை மேன்மேலும் சிந்திக்க வைத்துள்ளன.

'வெகுஜன இலக்கியம்' சார்ந்த இவ்வகை வாய்மொழிப்பாடல்களின் முக்கியத்துவம் அவ் வாய்மொழிப் பாடல்களின் பாடு பொருள் பற்றி நோக்குகின்றபோதுதான் துலக்கமுறுமாதலின் இந் நூல் வாய்மொழிப் பாடல்களின் பாடு பொருள் பற்றியே விரிவாக எடுத்துரைக்கமுற்பட்டுள்ளது. இவ்வகை பாடுபொருள் பற்றிய அவதானிப்பு பிரதேச அடிப்படைகளில் இடம்பெற்றுள்ளது. இவ்வகைப் பாடல்களின் பாடு பொருள் பிரதேச வேறுபாடுகளுக்கமைய தனித்துவப் பண்புகளைப் பெற்றிருப்பதே அதற்கான காரணமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் : இரண்டு
# பாடுபொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நாம் கவனத்திற்கெடுத்துள்ள வாய்மொழிப் புலவர்களது பாடுபொருள்பற்றி கவனிப்பது அவசியமானது. இத்தகைய அவதானிப்பினை

(I) மட்டக்களப்பு - அம்பாறை பிரதேசங்கள்

(II) மலையகப்பிரதேசம்

III) ஏனைய பிரதேசங்கள் என்ற அடிப்படையில் பார்ப்பது வசதியானது. முற்குறிப்பிட்டதுபோன்று பெரும்பாலான பாடுபொருள்கள் தனித்துவப் பண்புகளோடு அவ்வப் பிரதேசங்களுக்கு மட்டுமுரியனவாக விருப்பதுவே அதற்கான காரணமாகின்றது.

### (I) மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்கள்

மட்டக்களப்பு அம்பாறை பிரதேச வாய்மொழிப் புலவர்களது பாடுபொருள்களாகப் பின்வருவன அமைந்துள்ளன: (i) இயற்கை அனர்த்தங்கள் (ii) ஊர் நிகழ்வுகள் (iii) அன்றாட அனுபவங்கள் (iv) சமூகச்சார்பு (v) அரசியற்சார்பு (vi) சொந்த அனுபவங்கள், உணர்வுகள் (vii) வசைபாடுதல் / அறம்பாடுதல் அரசியற்சார்பு (viii) இதிகாசமும் வரலாறும் (ix) பக்தி உணர்ச்சி

### இயற்கை அனர்த்தங்கள்

கிழக்கிலங்கை, குறிப்பாக மட்டக்களப்பு - அம்பாறைப் பிரதேசங்களில் இவற்றின் புவியியலமைவு காரணமாக அடிக்கடி வெள்ளம், புயல், சூறாவளி என்பன ஏற்பட்டுவந்துள்ளன. இவ்வாறான இயற்கை அனர்த்தங்களினால் பொதுமக்களுக்கு அல்லது ஊருக்கு ஏற்படும் அழிவுகள் பற்றிய சிரத்தை வாய்மொழிப்புலவர்களது கவனத்தைப் பெருமளவு ஈர்த்துள்ளன. இவைபற்றி 'காவியங்கள்' என்ற பெயரிலே நெடும் பாடல்களாக இவர்கள் பாடிவந்துள்ளனர். இன்று கிடைப்பனவற்றுள் காலத்தினால் முற்பட்ட நூலாக, இன்றுவரையான ஆய்வின்படி அக்கரைப்பற்று வாசியான சேகுமதார் (1853-1940) பாடிய புயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியம் (1918) விளங்குகின்றது. இவர்தவிர ஆர். சீனிமுகம்மது அண்ணாவியார், கோ.நாராயணபிள்ளை, அப்துல்ஸமது ஆலிம் சாஹிபு, இப்றாஹீம் தாவுத்ஸா முதலானோரும் இத்தகைய காவியங்கள் பாடியுள்ளர்.

மேற்கூறியவாறான காவியங்கள் காப்புச் செய்யுளுடன் ஆரம்பிக்கும். பின்னர் நிகழ்வு இடம்பெற்ற காலவிவரம் கூறப்படும். தொடர்ந்து ஊர் அழிவு, பொதுமக்களது அவலங்கள், உயிரினங்களது அழிவுகள், விவரிக்கப்படும். நிவாரண உதவிகள் பற்றி தொடர்ந்து கூறப்படும். இறுதியாக, புலவரது அவையடக்கமும் வாழ்த்தும் இடம்பெறும். இவ்வாறு நோக்கும் போது இத்தகைய காவியங்கள் வெறும் அவலக்குரல்களாகவும் விவரணப் பதிவுகளாகவும் மட்டும் அமைந்துள்ளது என்று கூறிவிட முடியாது. இவற்றினூடே ஆங்காங்கே புலவரது சமூக விமர்சனமும் இடம்பெற்று விடுகின்றதென்பதே கவனத்திற்குரியது. சீனிமுகம்மது அண்ணாவியாரது சூறாவளிக்காவியத்தின் ஒரு பகுதி இது:

"நாளுக்கு நாளாக விலைவாசி ஏத்தமும்
வேளைக்குதவாத புளுத்தகருவாடும்
அளவை நிறுவை குறைகின்ற அனியாயக்காரர்களும்
அவர்களுக்கு வந்தவினை ஆண்டிக்குமாமே

சூறாவளி வந்துபோன பிறகாலே
ஆதாயமாய் விற்ற வியாபாரிமாரும்
ஒன்றுக்குப் பத்தாக விலைவாசி ஏத்தி
வறியவர்கள் முதல்களை வாரினாரம்மா

மக்காநகர் சென்ற ஹாஜிமாரெல்லாம்
வந்தவர்கள் சொந்தமனை பார்த்திட்டநேரம்
ஓட்டுவீடாகயிருந்த மாடமனையெல்லாம்
ஓட்ட வீடாச்சுதடா அரியறகுமானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹ்முது அப்துஸ்ஸமது ஆலிம் சாஹிபுவின் வெள்ளக் காவியத்தில் பின்வரும் பகுதி இடம்பெறகின்றது.

"திறமாக முதலாளிமார் நெல்லுடன் பதறும்
சேர்த்துக் கலந்து விலையேற்றி வித்தாரோ
மறையோனருளிய ஏழை வரிசக்காத்தை
மறுத்து நடந்த மாயமிதிலொன்றோ

ஒன்றுக்கு ஒண்ணரையாய் வட்டிக்குக்கொடுத்து
ஊராபொருளை உறிஞ்சிய பாவம்
கண்ணுக்கு முன்னாலே காட்டினானென்று
காத்திருந்தாலறிவீர்கள் பொருத்தமுடையோர்கள்"

## ஊர் விடயங்கள்

முக்கியமான இடங்கள்

ஊரிலுள்ள பொதுச்சந்தை முதலான இடங்கள் பற்றிப் பாடும் வழக்கம் வாய்மொழி புலவர்களிடம் இருந்துள்ளது. காத்தான்குடி சந்தைபற்றி பக்கீர்புலவர் பாடிய பாடலின் ஆரம்பம் பின்வருமாறமைந்துள்ளது:

விந்தை மிகுந்திலங்கும் மேலானதாய் விளங்கும்
விளப்பம் மிகுந்த மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த
காத்தான்குடி ஐந்தாம் குறிச்சியின்கூறாய்
வளம்மிகுந்த மீராபள்ளியைச் சேர்ந்த சந்தையைப் பாராய்.

மாங்கனி தேங்கனி
தேக்குப்புளி மாங்கனி சிவந்த வாழையின் கனி
மொத்தவாழையின் கனி செங்கதலியின்கனி
யானை வாழையின்கனி இதரவாழையின் கனி
இனும்பல கனிகள் இரசமிக்கத்தகும்
கொய்யாக்கனிகள் ஒரு பகுதி
......

கத்தகக் கறிக்கிழங்குகள் அவரக்காய்
தோடங்காய் வடுமாங்காய் நீடிக்கு விளிமாங்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிக் கிழங்கு பச்சை மிட்டிக்காய் மொச்சிக்காய்
குமிட்டிக்காய் மட்டுமே குப்பறையாய் கொண்டு குவிச்சிருக்கு
விலைகள் சொல்லிச் சலிச்சிருப்பார்கள் ஒரு பகுதி...

சேத்துமீன் கருங்கண்ணி சிறையாமீன்
கடல்விரால் திரளி மணலை ஊழி திருக்கை உளுவை காரை
வேற்றும் கொடுவா நெய்மீன் வேளாபலமீன் கொய்யும்
வெண்ணச் சுறாவும் தந்த மெண்ணப்படை மீன்கள் விற்றிடுவார்
கணக்குப்படி வாங்கிவிற்றிடுவார் ஒருபகுதி.

## ஊர் நிகழ்வுகள்

ஊரில் எதிர்பாராமல் நடைபெறும் முக்கியமான நிகழ்வுகள் பற்றியும் இப்புலவர்களால் பாடப்பட்டுள்ளன. இவ்விதத்தில், காத்தான்குடி 5ம் குறிச்சியிலேற்பட்ட தீவிபத்துபற்றி தம்பி லெவ்வைப் புலவர் இயற்றிய தீயாலெரிந்த காவியத்தின் ஒருபகுதியை இங்கே எடுத்தாள்வது பயனுடையது:

ஏகனருளாலே கனல் மாருத மெழும்பி
ஏழுகடல்களாறு கறை தருவுகள்தளம்பி
மடமடனவே தென்னை மரமடி தளம்பாமல்
மாபாவி கள்ளியின் பதி மனை புகுந்தே
(தெந்தி நதி)

புகுந்தவுடனே யொரு புகைச்சலும் மிரச்சலும்
புடிபுடி எனக் குடிலு மனைகளுமெரிந்து
அந்தய விகுத்தவர்கள் வந்ததை யமர்த்தவே
அள்ளியவர் நீர்களை யலறவீசினரே
(தெந்தி நதி)

தீயுமர யெறியும் நீர்திகுதிகனயெரிய
தேவனருளா லெண்ணெய்வந்ததுவே யொளிய
இந்த யுலகம் கிணறிந்த சலமெல்லவெண்
டின்பமுடன் புலவர் கவிதை சொன்னார்
(தெந்தி நதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறேன் ஒத்தமனை பற்றுவதனாலே
மற்றமனை யுள்வை ரமர்த்த முடியாமல்
செத்தை பழ யோலைகளை பிச்செறிவதாலே
சேத மனதப்பட யெரித்ததனாலே
(தெந்தி நதி)

பெட்டி பாய் எங்கேயென் பொன்னின் மகனாரே
கட்டில் தலகாணி யெங்கே கணவனாரே
சட்டைதுகில் போட நான் கட்டிய கொடிக்கயிறு
தாங்காமல் வைத்தனடி தாய்மாரே யென்பார்"

ஊரில் புதிய புதிய மாற்றங்கள் ஏற்படுகின்ற போது அதனைப் பாடுகின்ற வழக்கமும் வாய்மொழிப்புலவர்களிடம் காணப்பட்டது. உதாரணமாக, இங்கினியாகல நீர்தேக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அதனால் ஏற்பட்ட மாற்றங்கள் இப்புலவர்களைப் பெருமளவு கவர்ந்துள்ளன; பாடல்களும் பிறந்துள்ளன. இத்தகைய பாடலொன்றில் ஒரு பகுதி;

"மண்ணினை அள்ளி மரத்தைப் புடுங்குது
மாங்குயிலே வந்து பாரு
கேடரைத் தூக்கியே கீழே இறக்குது
கிட்ட நடந்து போய்ச் சேரு
மரத்தை அறுத்து மலைபோல் குமிக்குது
மாங்குயிலே வந்து பாரு
மரத்தை அள்ளி மலைபோல் குமிக்குது
மன்னவனே வந்து பாரு"

## வழிநடைப் பயணம்

போக்குவரத்துச் சாதனங்கள் கண்டுபிடிக்கப்படாத முன்னைய காலப்பகுதியில் கால்நடைப்பயணங்கள் முக்கியமான சமூக நடைமுறைகளாகவிருந்தன. பண்டைய இந்திய சமூகத்தில் தொலைதூரப்பயணங்கள் மிகுந்த கஷ்டமான வையாகவும் அச்சத்துக்குள்ளானவையாகவுமாக இருந்தனவென பண்டைய இந்திய வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. உள்ளூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநடைப் பயணங்களின்போது வழிதெரியாத சூழ்நிலையில் 'வழிநடைச் சிந்துகள்' ஈழத்து வாய் மொழிப்புலவர்களிடமிருந்து உருவாகியுள்ளன. (வழிநடைச்சிந்துகளே முதற் பயணநூல்கள் என்று கூறுவதுண்டு). கோளாவில் வாசியான தாண்டவவேலன் பாணகை வழிநடைக்கும்மி இயற்றியிருப்பதாக அறிய முடிகின்றது.

அக்கரைப்பற்று, கல்முனை பிரதேசங்களிலிருந்து மட்டக்களப்பிற்கு வருவோர் கிட்டங்கி அடைந்து இயந்திரப்படகு மூலம் மட்டக்களப்பு வாவியூடாகப் புளியந்தீவை அடைவர். இவ்வாறான பயணத்தின்போதும் வழிநடைச் சிந்துகள் பாடப்பட்டுள்ளன. மாவடிபள்ளியிலிருந்து புறப்படும்புலவர் சாய்ந்தமருது, கரைவாகு, கல்முனை, நற்பட்டிமுனை என்னும் ஊர்களூடாக கிட்டங்கி இடத்தை அடைந்து இயந்திரப்படகு ஊடாக மட்டக்களப்பு வாவிகடந்து புளியந்தீவை அடைகின்றார். புலவரொருவர் பாடிய பாடலின் இறுதிப் பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது:

நற்பிட்டிமாமுனை நகர்தனைச் சேர்ந்திட்டால்
நாகரீக மிதைப்பாரு
இதை நாடி நடந்து நாம் அப்பால போனாக்கா
நல்லதோர் கிட்டங்கி ஆறு அதில்
மீறிய சூத்திரக் கப்பலைப்போல விசைகொண்டு
ஓடுதென்னாளும் நாம ஏறியதிலோடுவோம்
இனிச்சுணங்காமலே ஏந்திழையே
வழிப்பூந்து நடந்து வா. பாலம்...

ஏறியே அங்கம் விசைகள் கொடுத்தால்
இரைச்சலாய் ஓடுது பாரு
அந்தம் மீறியே சீறிச்சினந்து
விசைகொண்டு ஓடுதென்னாளும்
அதில் தேடித்திரிகின்ற மீன்கள் சில
திரண்டு விரண்டு திசை தப்பி
ஓடதென்னாளும். பாலம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்றாட அனுபவங்கள்**

அன்றாடம் ஏற்படும் அனுபவங்கள் அண்மைக்கால வாய்மொழிப் புலவர்களை ஈர்த்துவந்துள்ளன. ஆரையம்பதியைச் சேர்ந்த மடாக்கர் கத்தவனம், ஊரில் நிகழ்ந்தவொரு மோட்டார் விபத்துப்பற்றி பின்வருமாறு பாடியிருப்பது கவனத்திற்குரியது.

"கூனென்ற கிழவியின் முதுகிலே - வெளவால்
குறுக்காலே ஓட்டினான் பைசிக்கிள்
நானென்று நீயென்று வந்துமே - சனம்
நல்லாகப் போட்டு அடித்தார்கள்
சடசட என்றுமே வெள்வால்
சாய்ந்தானே கடயின் கீழ் பலகையில்
அடிபுடி அடிபுடி என்றுமே ஆட்கள்
அம்புட்ட கம்போடு வந்தார்கள்."

வாய்மொழிப் புலவர்கள் சிலர் பஸ் பயண அனுபவங்களை பாடல்களூடாக வெளிப்படுத்தியிருக்கின்றனர். 'இரட்டையர்' என அழைக்கப்பட்ட, செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த (கணபதிப்பிள்ளை, சின்னவப்புலவர்) புலவர்கள் இருவர் இணைந்து பாடிய பாடல்கள் பின்வருமாறமைவன:

முன்னை நாட் பேருந்துப்பயணம்:

(அரியாசனத் திருத்தி யன்புடனே யருகிருந்து
பெரியாரைப் போற்றி பீடா சுவைத்து) - சிரியாமல்
சிரிக்கவைக்குஞ் சின்னவனின் சிந்தனைபோல்
விரிவகல முள்ளதே தாசின் பஸ்

இந்நாட் பேருந்துப் பயணம்:

(வரிசையாய் நிறுத்தி வாய்யா போயாவென்று
பெரியாரை மதியாது பேசி) - சிரியாமல்
சிணுங்கச் சிணுங்கச் சித்திரவதை புரியும்
இணங்காத இபோச பஸ்

(அடைப்புக்குறியிடப்பட்ட பகுதிகள் கல்விப் புலமைமிக்க கணபதிப்பிள்ளை புலவரால் பாடப்பட்டவை. ஏனையபகுதிகள் பாடசாலைக்கல்வி பெறாதவரான சின்னவப் புலவரால் பாடப்பட்டவை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகச்சார்பு

சமூகச்சார்பான உள்ளடக்கம் என்றவுடன் நவீனகல்வி வழிவந்த - நவீன காலத்திற்குரிய - படைப்பாளரது படைப்புகளே பெரும்பாலான ஆய்வாளராது பார்வைக்குட்படுகின்றன. இவர்களுக்கு நிகராக நீண்ட காலமாகவே இத்தகைய வாய்மொழிப் புலவர்களிடம் சமூகச்சார்புப் பார்வை காணப்பட்டு வந்துள்ளதென்பது மனங்கொள்ளப்படவேண்டியதொன்று. இவ்வாறான வாய்மொழிப் புலவர்களுள் அக்கரைப்பற்று மொட்டை வேலாப் போடியார் (1804-1880), கோளாவில் தாண்டவவேலன், க.சின்னவப்புலவர் முதலானோர் முக்கிய மானவர்கள். இவர்களது பார்வையில் பின்வரும் பிரச்சினைகள் வெளிப்பட்டுள்ளன:

i) கோயிற் குறைபாடு ii) தொழிலாளர் துயரம் iii) மதுவிலக்கு iv) ஊர்க்குறைபாடு v) ஒழுக்கபோதனை vi) மாறுபடும் நாகரிகம் vii) அரசியற்சார்பு viii) வசைபாடுதல் / அறம்பாடுதல் x) இதிகாசக்கதைகளும் வரலாறும் xi) பக்தி

## கோயிற் குறைபாடு

மட்டக்களப்பு அம்பாறை பிரதேசங்கள் கோயில்கள் நிறைந்துள்ள - மலிந்துள்ள - மதப்பற்று மிகுந்துள்ள பிரதேசங்களென்பது அனைவரும் அறிந்துள்ளவிடயமே இத்தகைய சூழலிலிருந்து கோயிலில் நிலவும் குறைபாடுகள் சார்ந்த எதிர்ப்புக்குரலெழுவது வியப்பிற்குரியதே. இவ்விதத்தில் தாண்டவவேலன் பாடிய பின்வரும் பாடல் முக்கியத்துவமான தொன்று:

"கடவுளின் பெயரைச் சொல்லி
களியாட்டந்தான் புரியும் கனவான் பல்லோர்
வழிதவறி வரம்பேறி வம்புக்குள்
வாழ்வு தன்னை தள்ளிவிட்டார்
பெரியவர்கள் எனச் சொல்லிப்
பேயாட்டம் ஆடுகின்ற பித்தர் கூட்டம்
நெறிப்பட்ட நிலைகொண்டு நிம்மதியாய்
மக்கள் குலம் வாழச் செய்யார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர் துயரம்

பல்வேறு தொழில்கள் புரியும் பின்னணியில் இருந்து வருகின்ற வாய்மொழிப் புலவர்கள் தொழிலாளர் துயரங்கள் பற்றி கவனஞ்செலுத்தியிருப்பது இயல்பானதே இவ்விதத்தில் சின்னவப்புலவரது பின்வரும் பாடல் கவனத்திற்குரியது:-

"வெட்டுக்காரன் கூலிதன்னைத்
தட்டி எடுப்பதற்கு முட்டுப்பாடு அதிகமாம்
பட்டப்பகல் வெயில் தனிலே அட்டை கடித்திழுக்க
பகல் எல்லாங் குனித்து கொள்கிறான்
பகவானை நேர்ந்து கொள்கிறான்'

## ஊர்க்குறைபாடு

தமது ஊரில் நிலவிவருகின்ற குறைபாடுகளும் வாய்மொழிப்புலவர்களை உறுத்திவந்துள்ளன. இத்தகைய மரபினரான பிற்காலப்புலவர்கள் சிலர் துணிச்சலோடு அத்தகைய குறைபாடுகளை விமர்சித்துவந்துள்ளனர். ஏறாவூர் எல்.கே.முஹியிதீன் பிச்சைப்புலவர் (1914 - 1980) இயற்றிய பின்வரும்பாடல் அவ்விதத்தில் விதந்துரைக்கப்பட வேண்டியது.

ஏர்வளம் மிஞ்சிய ஏறாவூர்ப் பட்டினம்
எப்போதுயருங்கா அண்ணாச்சி
சீர்பெறும் என்றுநாம் எண்ணினோம் - எண்ணங்கள்
சேற்றுள் விழுந்த கதையாச்சு

முந்தியிருந்த தலைவரெல்லோருமே
மோசக் காரர்களாம் அண்ணாச்சி
பிந்தியே வந்த இளசுகள் - பேசிப்
பிடித்த பொறுப்புக்கள் என்னாச்சு

கூட்டுறவுக்குள்ளே குந்திக்கொண்டு சிலர்
கொள்ளையடிப்பாங்கள் அண்ணாச்சி
போட்டபடிக்கல் நிறைய நிறுத்தால்
பொருட்கள் குறைவதும் என்னாச்சு

மாரிபொழிந்து மழைத்தண்ணீர் கட்டினால்
மார்கட்டுள் செல்ல இயலாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறிய சேற்றில் உடுப்புப் புதைந்திடில்
ஊத்தையைப் போக்கிடச் சோப்பேது

வாசிகசாலையை வைத்து நடத்துவார்
வந்திடும் கொச்சிக்காய்தூள் வாடையை
ஆசிக்கத்தக்க அறிவையடைந்திட
ஆகுமோ ஆடும் மனத்தோட

## ஒழுக்க போதனை

சிறுவர்களுக்கு ஒழுக்கம் போதிக்கும் பாடல்களையும் வாய்மொழிப்புலவர்கள் இயற்றியுள்ளனர். எல்.கே. முஹியித்தீன் பிச்சைப்புலவர் பாடியது, பின்வரும் பாடல்:

காலைமணி ஏழுக்குமுன்னே குளிக்கணும் - கரிக்
கந்தையானாலும் கசக்கியே உடுக்கணும்
சீலமிகு பிள்ளையெனப் பெயர் எடுக்கணும் - தாய்(ச்)
செந்தமிழை ஊக்கமுடன் படிக்கணும்

பேய்க்குணங்கள் மாளப், பெரியவனாய் வாழ
ஆக்கம் வரத்தோழா, அறிவுரைப்பேன் கேளா.

பள்ளிக் கொழிக்காதங்கோ - பழம்
பாடம் படிக்காமல் படுக்காதங்கோ
பாடமெல்லாம் நெஞ்சினில் இருத்தி வைத்துக்கோ - படித்த
பாடப்படி நல்லொழுக்கமாய் நடந்துக்கோ
நீடு கையெழுத்து நிரையாய் எழுதிக்கோ - நெறி
நீதியில் தவறிடாமல் நீ நடந்துக்கோ

ஆணவமும் வேணும், அகப்பெருமை தோணும்
மாணவனே நீயும், மறந்துவிடு காணும்
சூதை விரும்பாதப்பா - சோரமனத்
தோழமையே கூடாதப்பா

சண்டியனாய் வந்தவனை நீ விரும்பாதே - உன்னை
தஞ்சமென்றடைந்தவரைத் தள்ளிவிடாதே
பண்டு கைத்தொழில்முறை யெதையும் விடாதே - படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திடினும் உண்மைசொல்லப் பின்னடையாதே
கஞ்சா அபின் கள்ளு குடிவெறியைத்தள்ளு
அஞ்சாதறிவைக்கொள்ளு. அகம் விரும்பித்துள்ளு

## மாறுபடும் நாகரிகம்

காலத்தினால் முற்பட்ட வாய்மொழிப் பாடல்கள் குறிப்பிட்ட காலகட்ட நாகரிக நடைமுறைகளை எடுத்துரைப்பதுண்டு. இந்நிலையில் அவை காலப்பதிவுகளாகிவிடுகின்றன. உதாரணமாக, சென்ற நூற்றாண்டின் இருபதுகள், முப்பதுகளில் ஜேர்மனி வெள்ளியாலான ஆபரணங்களின் புழக்கம் முஸ்லிம் மக்கள் மத்தில் காணப்பட்டமை இன்றுள்ளோரால் அறியப்படாத விடயமாகிவிட்டது. இவ்விதத்தில் சாய்ந்தமருது காசிம்பாவா பாடிய பாடல் கவனத்திற்குரியது. அது பின்வருமாறமைகின்றது:

பதம் - பல்லவி

ஜர்மன் வெள்ளி விடுவதெல்லாம் ஜயமெடிமானே - இன்னாள்
ஜர்மன் வெள்ளி தொடுவதெல்லாம் நயமெடிதேனே

அனுபல்லவி

ஜர்மனையுந் தருமென்றே சாற்றுவோமடிமானே - தோழி
ஜர்மன் செய்யும் தருமத்துக்காய் போற்றுவோமடி - துடி
தாரணிதனிலிதுவே நல்லநேரம் தாங்களும் ஜர்மன்
வெள்ளியுமொரு
வாரம் சீரணிபல பணி அணி பூணாரம் செய்வதெல்லாம் நமக்கே
உபகாரம் (ஜர்)

சரணங்கள்

எனது கொண்றைக் கொருசெம்புக் கூரில்லை என்றேதேடி -
முன்னாள்
ஈக்கிக் குச்சை மாட்டிக் கொண்டு இருந்தேனடி வாடி
மனம் நிறைந்த ஜர்மன் வெள்ளி மன்னன் வந்து கூடி -கொன்றை
மாலை முப்பூ கொன்றைக்குத்தி தலைநிரம்பச் சூடி
இனிய குளைக் காதினுக்கும் பிலுக்கலுக்குத் திணக்கி - அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலைச்சங்கிலி தூக்கி நல்லாய்த் துலக்கமுற மினுக்கி
பனிமதி போலிலங்க இருகாதினிலுந் தூக்கி - என்றன்
பல்விளக்கிக் கண்ணாடி தன்னில் முகநோக்கி - (துடி)
பார்த்த பின்னழகு கண்டே களிகூர்ந்தேன் - பாங்கியருடன்
மகிழ்வுறச் சேரந்தேன் - ஏற்றிமணமணப் பந்தலில் போந்தேன்
இருத்தி வெள்ளிலை பிளவீந்திடத் தேர்ந்தேன் - (ஜர்மன்)

இன்னமும் நான் பிறந்து வயதிவ்வளவானேனே - ஒரு
இரும்புவளைத் துரும்பெனுமென் கையிலணிந்திலனே
அன்னையரே ஜர்மன் வெள்ளி அரசன் வந்துதானே - கையில்
அடுக்கடுக்குக் காப்பு முன்பின் காப்புமணிந்தேனே
சின்னச்சின்ன விரல்களெல்லாம் மின்னி மின்னித் துலங்க-
நல்லா
செய்தெடுத்த மோதிரங்கள் வெய்யவன் போலிலங்க

கன்னி மின்னக் காலாளிபீலி தண்டைக்கொலுசும் இரு
கால் நிரம்ப அணிந்து வெள்ளி காய்ந்த மரமானேன் (துடி)
கடைசியிலிதர்க்கொரு துணையாருமில்லையே -
கணவனாருளைப்பொரு
சதக்காசுமிலையே - உடையதெல்லாங் கூலி உலக்கையி
நிலையே
உண்டு திண்டளித்ததினா லொன்றுமிலையே (ஜர்மன்)

**அரசியற் சார்பு**

(முன்னர் சமூகச் சார்புபற்றிக் கூறியிருப்பது போன்றே) அரசியற்சார்பான உள்ளடக்கம் என்றவுடனும் நவீன கல்வி வழிவந்த படைப்பாளரது படைப்புகளே ஆய்வாளரது பார்வைக் குட்படுகின்றன. இவர்களுக்கு நிகராக, இவ்வாய்மொழிப்புலவர் களிடமும் அரசியற் சார்ப்புப் பார்வை ஓரளவென்றாலும் காணப்பட்டு வந்துள்ளதென்பது மனங்கொள்ளப்படவேண்டியது. இவ்வாறான வாய்மொழிப் புலவர்களுள் சம்மாந்துறை எஸ். முகம்மதுத் தம்பி ஹாஜியார், ஊறணி பூபாலபிள்ளை, மூதூர் ஏ.எஸ். இப்றாகிம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள் இவர்களது பாடல் பொருளினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்: i) அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம் ii) அரசியற் பிரச்சாரம் iii) பேரினவாத ஒடுக்குமுறை v) அரசியல் தலைவர்கள் iv) போர்க்கால அவலங்கள்.

அரசியல் விமர்சனம்

ஈழத்து எழுத்து இலக்கியப் படைப்பாளிகளிடம் குறிப்பாக நவீன கவிஞர்களிடம் அரசியல் ஈடுபாடு என்பது சுதந்திரத்திற்குப் பின்னர் மொழியுணர்ச்சி சார்ந்து முகிழ்க்க ஆரம்பித்தது. முற்பட்ட நிலையில் அதுபற்றிய அக்கறை குன்றியிருந்தது. இத்தகைய இலக்கியச் சூழலில் ஐம்பதுக்கு முற்பட்ட இவ்வாய்மொழிப் புலவர்களிடம் அரசியல் விவகாரங்களில் அக்கறை - அதுவும் விமர்சன நோக்குடைய அக்கறை - காணப்பட்டிருந்தமை வியப்பிற்குரியதே. இவ்விதத்தில் சம்மாந்துறை வாசியான முகம்மதுதம்பி ஹாஜியார் ஈழத்து அரசியற் சார்புக் கவிதை முன்னோடிகளுள் முதன்மையான வராகின்றாரென்றுகூடக் கூறலாம், அதற்கு வழிவகுத்துள்ள பாடலை முழுமையாகத் தருவது பொருத்தமானது. அது இதுதான்:

சுதந்திரப்பா

இன்னும் என்ன செய்யப்போறாங்கோ
சுதந்திரம் தனை என்னமுறையில் நடத்தப்
போறாங்கோ. (இன்)

வட்டமேசை கூடியாச்சு
வந்தே மாதரம் பாடியாச்சு
இஸ்டமுடன் இலங்கை நகர்க்கு
சுதந்திரமும் கிடைத்துப்போச்சு (இன்)

தேசாதிபதி சேர் ஹென்றி மூராம்
சேனநாயகா பிரதமராம்
ஸ்தல ஸ்தாபன சுகாதார மந்திரி
என்னும் பண்டார நாயகாவும் கூடி
(இன்னும் என்ன செய்யப் போறாங்கோ)

உத்தியோகம் தனில் உள்நாட்டு மந்திரி
உற்றகுணத்திலாகவும் கூடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றவராம் திருமந்திரி ஐயா
நல்லவரும் கூடி எங்களிலங்கையை
(இன்னுமென்ன செய்யப்போறாங்கோ)
சிங்கக் கொடியேற்ற சேனநாயகா
எண்ணம் அதை செய்யாமல் தடுக்க
ஜீ.ஜீ. பொன்னம்பலம் எண்ணம்
இந்த விசயத்தில் கவுஞ்சலில் குளப்பம்
இப்படி இருந்தால் என்னமா நடக்கும் (இனி)

சிங்கக் கொடிதனை சேர்ந்து
ஆமோதித்தார்
சின்ன லெப்பை எனும் காத்தன்குடிப்
பற்றார்
மங்காத இஸ்லாத்தின் மகிமையை
எடுத்தார் மாபெரும் சிங்கத்துக்கே கயிர்பிடித்தார். (இனி)

அரசியற் பிரச்சாரம்

வாய்மொழிப் புலவர்கள் பெரும்பாலானோர் சமூக அடித்தளத்திலிருந்து வந்தோராவர். ஆகவே, அவர்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கியோரே. இந்நிலையில் இவ்வாய் மொழிப் புலவர்களுட்சிலர் அரசியல் கட்சிகளின் பிரச்சாரங் களுக்குப் பயன்படுத்தப்பட்டனர். இவ்வாறான வாய்மொழிப் புலவர்களுள் ஒருவராகவுள்ள ஊறணி ஊர் சார்ந்த புலவர் பூபாலபிள்ளை அரசியல் மேடைகளிலேறியுள்ளார்; பாடியுள்ளார், பின்வருவது அத்தகைய பாடல்களுளொன்றே:

மானமுள்ள தமிழா வாடா - மார்பு தட்டி
முன்னே வாடா - மதியாதான் வாசல் தன்னில்
மிதியாய் முத்தம் தமிழா வாடா - (மானமுள்ள தமிழா)

அஞ்சிடா நெஞ்சந்தன்னைத் - துஞ்சாது காப்பதற்கு
வஞ்சனை செய்யாது - இப்போ வரவேற்போம் எம்.பி
யையே - (மானமுள்ள தமிழாவாடா)

காசு, பணம், மனைவி - மக்கள், வீடு, வாசல் தன்னை எல்
லாம், காட்டினிலே விட்டது போல் கைவிட்
டாரே - தமிழை வெல்ல - (மானமுள்ள தமிழாவாடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழியை வளக்க வென்று தான் நடந்தார்
தவம் இருக்க - வாய்மொழியும் செந்தமிழால்
வந்தமர்ந்தார் சிறைதன்னில் - (மானமுள்ள தமிழாவாடா)

ஆட்சி பெற்ற தமிழதனை அழிக்காமல் வழி காக்க
வெற்றி பெறும் வீடதனை விரும்பிடுவோம்
உறுதியாக - (மானமுள்ள தமிழாவாடா)

பங்குனி பத்தொன்பதில் மங்கிடாப் புகழ் பெறத்
தூங்கியே இருந்திடாமல் துலக்கிடுவோம் வீடதனை

ஊறணி மக்களெல்லாம் மனதாய் அன்று
கூடி - உண்மை பெறும் தமிழை வெல்ல
உறுதி செய்வோம் மனைதனக்கே - (மானமுள்ள தமிழாவாடா)

வெற்றிக்கொடி முழங்க ஏற்றிடுவோம் வீடதனைப்
பற்றிய வீடதற்கே வைத்திடுவோம் புள்ளடியை
(மானமுள்ள தமிழாவாடா)

பேரினவாத ஒடுக்குமுறை

ஈழத்தில் பேரினவாத ஒடுக்குமுறையின் உச்சங்களாக வன்செயல்கள் வெளிப்பட்டு வந்துள்ளன, இவற்றிற்கென்று நீண்ட வரலாறுகளுமுள்ளன. இவ்வாறன சூழலில் வாய்மொழிப் புலவர்களுட் சிலர் வன்செயல் வரலாறு பற்றிய நெடும்பாடல்கள் எழுதியிருக்கின்றனர். முற்குறிப்பிட்ட பூபாலபிள்ளை இவ் விதத்திலும் கவனத்திற்குரியவர். இவர் இயற்றியது 'வஞ்செயல்கும்மி' யாயினும் பெயருக்கேற்ப வன்செயல்பற்றி விபரிக்காமால் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட ஈழத்து அரசியல் வரலாற்றினை மேலோட்டமாகவும் மிகச் சுருக்கமாகவும் எடுத்துரைத்துள்ளது.

போர்க்கால அவலங்கள்

போர்க்கால அவலங்கள் பற்றியும் வாய்மொழிப் புலவர்கள் பலர் பாடல்களை இயற்றியுள்ளனர். ஏ.எஸ். இப்றாஹிம் (மூதூர் கலைமேகம்) எழுதிய வன்செயற்காவியத்தின் ஒரு பகுதி கீழே இடம்பெற்றுள்ளது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பட்டினித் தொல்லைகள் ஒரு புறம் வாட்ட
பட்டாளவீரர்கள் மறு புறம்தாக்க
சுட்டபேர் பயங்கரவாதி யென்றோட,
சுடுபட்டு மாண்டனர் அப்பாவி மக்கள்!

பத்தாறு குடும்பங்க ளொத்தாசையாலே
பலபேருமொன்றாகி முகாம்களை யமைத்து
சித்தலியன் குட்டிபோல் சிறு குடிசைகட்டி
சொல்லொண்ணாத்துயரத்தில் சிந்தினர் கண்ணீர்

பள்ளிக்குச் செல்கின்ற பிள்ளைகள் கடத்தல்
பக்கத்து ஊருக்குப் போவோரும் கடத்தல்
உள்ளூர்க் குள்ளேயும் ஒவ்வோர் கடத்தல்
உருப்படியாகுமோ இறைவா இது தகுமோ

வண்ணமயில் மாதரசே இன்னமு நீ கேளாய்
மானிடர் படுந்துயர் ஏராளமுண்டு
கண்ணை இழந்தோரும் காலைத் தொலைத்தோரும்
கணக்கில்லை ஐயகோ தீமை யழியாதோ!"

போர்க்கால அவலங்கள் பற்றி விபரித்து அவற்றிலிருந்து மீட்சி வேண்டுகின்ற பிரார்த்தனைப் பாடல்களும் வாய்மொழிப் புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன. (வாய்மொழிப் புலவர் மரபினர் இவ்வாறு பாடுவதைத்தவிர வேறென்ன செய்யமுடியும்?) இறக்காமம் சார்ந்த மீரா உம்மா பாடிய பாடலின் ஒருபகுதி இவ்வாறமையும்:

பொல்லாத புலிகள் ராணுவங்கள் ஆயுதம்
புச்சாக்கி வைத்துவிடுங்கள்
பெரிய நெருப்பை நூருங்கள்
உங்கள் பொறுமை நிறைந்திட்ட
பொதுமக்கள் யாவருக்கும்
பெரும் வெற்றி வாங்கித்தாருங்கள்
புலிகளைப் பொதுமக்கள் ஆக்கிவையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியற் தலைவர்கள் பற்றி - குறிப்பாக அவர்கள் மரணிக்கின்ற வேளையில் அவர்கள் மீது 'இரங்கற்பா' அல்லது ஒப்பாரிபாடுகின்ற மரபு வாய்மொழியில் புலவர்களிடம் காணப்பட்டது. ஒப்பாரிப்பாடல் பாடுகின்ற வழக்கம் பெண்களிடம் பெருமளவிற் காணப்படுவது இயல்பானதே. (அத்தகையோர் தொடர்ந்து பாடிவரும் வாய்மொழிப்புலவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.)

மேற்கூறிய விதத்தில், முஸ்லீம் காங்கிரஸ் தலைவரா கத்திகழ்ந்த அமைச்சர் அஷ்ரப் காலமாகியபோது முஸ்லீம் பெண்கள் பலர் ஒப்பாரிப் பாடல்கள் பாடியிருப்பதாக அறிய முடிகின்றது. பின்வருவது மருதமுனையைச் சார்ந்த ஏ.றஹ்மத்தும்மா பாடிய பாடலின் ஒரு பகுதி:

சந்தன மரத்த தாளியாலும் நாட்டாம
பாளிமன்றில் நாட்டி வைத்தோம் அல்லா
பறித்தெடுத்துப் போட்டாயடா
எண்பத்தி ஒன்பதில் நாம இருபேரும் வைத்தமரம்

இரண்டாயிரம் ஆண்டில் மச்சி இது
இறந்துழந்த மாயமென்ன?
ஆளமுள்ள கொங்கையிலே அழகான ஒரு பூப்பூத்து
எங்கும் மணக்கிறது சந்திரிகா நீ
இம்மணத்தைக் காணயில்லை

மற்றெரு பெண்ணின் ஒப்பாரிப் பாடல் பின்வருமாறமைகின்றது. மேற்கூறிய பாடலினை விட, கவிநயம் மிகுந்ததாக அது காணப்படுவதால் முழுமையாகத் தரப்படுகின்றது:

ஆலமெல்லாம் படைத்த அந்த மேலோனை முன்னிறுத்தி
மனமிரங்கிப் பாடுகிறேன் மக்களே நீங்க கேட்டுங்க
பிஸ்மிலலாஹி என்று நம்மட வேதத்தை முன்னிறுத்தி
முஸ்லிமுக்கு பாடுபட்டார் - நமக்கு
முன்னுரிமை வேணும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு மரம் நாட்டி
அதன் இணலில் நாங்கள் குந்தி
பழமருந்தும் வேளையில் - அல்லா' நீ
பறிச்செடுத்துப் போட்டாயடா

லம்மு லக்கின்
கிழம்பி வந்த சூரியனே
மேகம் மறைத்ததல்லாஹ்
கிழம்பி வரும்நிலவ
கிராணம் மறைச்சது போல் - எங்கட
முடிசூடா மன்னவனே - அல்லாஹ்
மூடி மறைச்சிப் போட்டாயடா

வெயிலால பால் குடிச்சி
வேர்வையாலே தண்ணீர் வாத்து
கால் நடையாய் வந்த காட்சி - இப்ப எங்கட
கண்ணெதிரே தோன்றுதல்லாஹ்

நடையாய் நடநடந்து - அவர்
நாட்டு மக்களை தாங்கி நின்று
நமக்கு கட்சி ஒன்றா உருவாக்கினார் - அதற்கு
நாம கருணை காட்டவேணுமல்லோ
பார்ளி மன்றில் உதிச்சி பறிச் செடுத்தோம் வெண்ணிலவ
மழையென்னும் கருமேகம் இப்ப மூடிமறைச்சதல்லாஹ்

எங்கள் இளவரசர் ஏறிவந்த கப்பலுக்கும்
சூட்சுமம் என்றும் மால போட்ட இப்ப
சுட்ரெிச்சு போட்டதல்லாஹ்

தங்கம் போல் மேனி தரையிலே தானுளுந்து
சடலமத காணாம தவிச்சம் அல்லாஹ் கொஞ்சநேரம்

பொன்னான மேனி அல்லாஹ்
பூப்போல தானுளுந்து
கண்ணால காணாம
கடும் கொலை ஆக்கினாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம ராசாவே
உதிச்சி வந்த ஒளி விளக்கே
பத்தியெரிய வெச்சி - அல்லாஹ் இப்ப
எங்கள பரதேசி ஆக்கினாக

எங்கட பட்டத்து ராசா
பறந்து வந்த கப்பலுக்கு
ஆரும் அறியாம அநியாயம் செய்தாக அல்லாஹ்

குத்துவிளக்கெடுத்து கொழுத்தி வெச்சோம்
கோடி காலம் அது பத்து மென்று
பொறாமை என்னும் புயலடிச்சி
ஒளி மறஞ்சி போச்சு தல்லாஹ்

மாறுதில்லை ஆறுதில்லை அல்லாஹ்
மனவருத்தம் தீருதில்லை

## சொந்த அனுபவங்கள் / உணர்வுகள்

மேற்குறிப்பிட்ட விவகாரங்கள் பற்றியும் வாய்மொழிப் புலவர்கள் பாடிவந்துள்ளனர். இவை பல்வேறு விடயங்கள் சார்ந்தனவாகக் காணப்பட்டன.

ஆசைகள்:

தமது வழிபாட்டிற்குரிய தலங்களுக்குச் செல்வதுபற்றி சம்மாந்துறை எஸ்.முகம்மதுத்தம்பி ஹாஜியார் பின்வருமாறு பாடுகின்றார்:

### மக்கா ஆசை

(கண்ணும் கண்ணும் பேசியதும் உன்னால் அன்றோ என்ற மெட்டு)

கண்ணின் மணியான நபி நீரேயன்றோ உம்மை
காணவரமக்கா வெகு தூரமுமன்றோ
என்மனதில் ஏற்றிவைத்த தீபமல்லவா
எங்கள் நபி சொல் மறந்தால்
பாவமல்லவா. (கண்ணில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகினிலே உண்மைதனை
உய்வித்தசீலா
உம்மை அன்றி உலகினிலே
உண்டுமோ மேலா
செம்மை தனை சீர்திருத்தி
வைத்த செங் கோலா - எங்கள்
ஜெம்மல் நபியாய் பிறந்த
நாயகமன்றோ (கண்ணில்)

காணவேணும் காணவேணும் கஃபாவினை
நான் கண்டுகளி கூற வேணும் கஃபாவினை
சுத்தவேணும் சுத்தவேணும் கஃபாவினை
ஏழு சுத்து வலம் சுத்த வரும் நாளு மென்னாளோ
(கண்ணில்)

துயரங்கள்

பெண்கள் சிலர் தனிப்பட்ட பிரச்சினைகளால் ஏற்படும் மனத்துயரங்களை இவ்வகைப் பாடல்களூடாக வெளிப்படுத்தி வந்திருப்பதையும் அறிய முடிகின்றது.

தன்னைக் கைவிட்டுச் சென்ற காதலன்பற்றி தமது மாமியாரிடம் ஒரு பெண் இவ்வாறு முறைப்பாடு செய்கின்றாள். (பாடல் அதன் கவிநயம் காரணமாக முழுமையாக இங்கே தரப்பட்டுள்ளது.)

மாமிக்கு மாமி மறுமுறைக்கு நீ மாமி
ஈமானுள்ள மாமி என் கதய கேள் மாமி

வெட்டுன கட்டையில வேரு தளச்சது போல்
உள்ளதும் ஓர் மாமி நிங்க ஒத்துமய்க்கு வந்திருங்க.

மாமா இடத்தில் மணமுடிப்பன் எண்டு சொன்னார்
ஒங்கட வம்பு வசயால மாமி எண்ட வழிமறந்து போனாருகா

ஈச்சமரம் ஒன்டு இல உதிர்ந்து பழும் பழுத்து
சவண்டு கொடுக்கும் என்ட தன்மய நீ கேள் மாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவயில இருந்த தகர மரம் பூத்தது போல்
அகராதி போறன் எண்டு என்ட அழுமொழி நீங்க என்னாதிங்க

பாதாள கெங்கயில படருமந்த சல்லது போல்
ஒன்ட மனச வளச்சி மாமி இரும்பு கறள் கட்டினதோ
இரும்பு கறள் கட்டினன்டு அந்நேரம் கண்டிருந்தா
தேங்கா எண்ண கொண்டு தெளிவு கண்டு நானெடுப்பன்

மய்யால எழுதி மடிச்ச கடதாசியில கலத்தால்
எழுதினாப் போல் என்ட கல்புலயும் மாமி கக்கிசம்கா

என்ட தாயாரும் இல்ல தகப்பனும்தான் மவுத்து தனித்து கிடக்கன்
என்ட தங்க மாமி என்ன ஆதரிங்க.

ஆழமுள்ள கெங்கயில அல்லி பிடிச்சது போல்
ஒங்கட மனசு வளச்சி காடு இரிக்கி என்டு அறியேன்.

பேனய் எழுத பெருவிரல ஊண்டி வய்க்க
எழுத விதி இல்லாம மாமி ஏங்குதுகா என் மனது

நிலயில நிண்டு நெத்திக்கை உயர்த்தி தக்பீர் கட்டின
மாமி தவாவிரிக்கும் ஒங்களுக்கு

தேக்கமரம் பூத்து தெருவில் சொரிந்தது போல் நாங்க
ஏங்கி அழுகுறுத்த மாமி நீங்க என்ன என்டு கேட்டிருங்க

நான் ஈரச்சுவர் ஆனேன் இடிஞ்சி உழுந்த
மண் ஆனேன். பாரக் குமர் ஆனேன் மாமி
என்ட பாரமெல்லாம் ஒன்னோடகா

காணி மூணு ஏக்கரும் கல்வீடும் உண்டுமெண்டா
கண்ணான மாமி என்ன காதலிக்க ஆள் கிடய்க்கும்

ஒரு கப்பல் சனத்த உடன கலாசாக்கி பிறகு
கர ஏத்தினது மாமி புறக்கலயோ ஒங்களுக்கு

எழுவான் படுவான் எட்டுத் திசையும் நினைத்து
சபுறு செய்து பாக்கன் மாமி ஒங்கட சதி எனக்கி மாறுதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு பனிரண்டில் மாண்டு மறைஞ்ச கப்பல்
எழுப்பும் முகையதீண்ட இரக்கம் கொண்டு என்ன பார் மாமி

நான் இளையாள் சிறியாள் இருந்து சீரழியாம
மொக்காட்டுகாற மாமி ஒண்ட முடிவெனக்கு சொல்லுமாமி

மற்றொரு பெண் தனக்கு மணம் பேசப்பட்ட ஆடவனை பற்றிப் பின்வருமாறு ஏளனம் செய்கின்றாள்.

"என் செல்ல லாத்தாண்டீ
எனக்கு இந்தச்
சோகையன் வேணாம்டீ
காக்கொத்தரிசியில
கஞ்சி நிறுக்கிறான்
காறாத்தல் சீனியில
மிச்சம் பிடிக்கிறான்
என் செல்ல லாத்தான்டீ
எனக்கு இந்தச்
சோகையன் வேணாம்டீ
எண்ணெய்த் தலயில
மண் அள்ளிப் போர்றான்
ஏறிப்படுக்கிற கட்டிலப் பிக்கிறான்
சுங்கான் கருவாட்ட
சுட்டுச் சப்பிறான்.....

இன்னொரு பெண் தனது குடும்பப் பிரச்சினைபற்றி இவ்வாறு எடுத்துரைக்கின்றாள்:

நன்றி மறந்தார்
நகமிருக்கச் சதையெடுத்தார்
கழுத்திலையும் கத்தி வைத்தார் - இனி ஓர்
காலமும் தான் பேச்சிருக்கோ

மலடி எண்டு சொல்லி
வசை பேசிப் போட்டாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த றகுமான் மாமி - என்னைப்
பதராக்கிப் போட்டாராக்கும்

உருகும் மெழுகானேன்
உள்ளம் மெழுகுக் கொம்பானேன்
கடுகு நிறமானேன் - மதினி இந்தக்
கவலை வந்த நாள் தொடுத்து

பட்ட மரம் பழம் தரும்
பறவை இறகு தரும்
சந்திரனும் சலாமுரைக்கும் - என்ற
தன்மைகளைக் கேட்டவுடன்

கடலை மையாக்கி
கானகத்தை தாளாக்கி
எழுதி முடித்தாலும்
என்கவலை தீராது

கவலையுடன் பாடினேன் - என்ற
கண்ணால் நீர் ஓடியதால்
தொப்பி நனைஞ்சிருக்கு - அதைக்
கூர்மையுடன் பார் மதினி

இப்பாட்டை படித்தவர்க்கும்
படியென்று சொன்னவர்க்கும்
கேட்டிருந்த பேர்களுக்கும்
கிருபை செய்வாய் நீ வாழி

மேற்கூறியவற்றை நோக்கும்போது, பெண்களது குறிப்பாக முஸ்லீம் பெண்களது மனத் துயரங்களுக்கு வடிகாலாக, இப்பாடல் மரபு இருந்துவந்துள்ளதென்பது நன்கு புலப்படுகின்றது!

**சிறைச்சாலை வாழ்க்கை**

சிறைச்சாலைக்குச் செல்ல நேரிட்டசிலர் தமது சிறைச்சாலை வாழ்க்கை பற்றி - அதிலிருந்து மீட்சிபெறுவது பற்றி - கடவுளிடம் பிரார்த்தனை செய்யும் முறையில் பாடிவந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கின்றனர். கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ந.மா. கேதாரபிள்ளை பாடிய பாடலின் ஒரு பகுதி இங்கே இடம் பெறுகின்றது:

பூட்டிய மின்சார வெளிச்சமிங்கே
பூவாசா பைப்புத் தண்ணீர்க் குளிப்பும்
காட்டியடைக்கிறார் கதவேழுக்குள் தினம்
கதிரேசா! என்சிறை மீளுமப்பா.

பெரும் புகழாகவே கூறுகிறேன் சிறை
பெருத்த கோபுரங்கள் தான் அதிகம்
பாரும் புகழும் இரும்புக் கேற்றேழுண்டு
பச்சை மயிலேறி வாருமப்பா.

பேருமோ சொல்லுகிறேன் போகம் பறை
பெரிய சிறைச்சாலை இமய கூடம்
காருமெனதுயிர் கந்தா இவ்வேளையில்
கார்த்திகேயா சிறை மீளுமப்பா

பையவே மயில் ஏறி வாரும் கந்தாகுகா
பாலன் நான் படும் துயரம் பாரும்
மெய்யெல்லாம் புண்ணாகிவிட்டதே என்செய்வேன்
விடியுமட்டும் மூட்டைக் கடியுமப்பா.

பொழுது உதயமோ தெரியாது இந்த
பூலோக வெளிச்சமோ புரியாது
அழுது புலம்பியும் சீவன் போகுதில்லை
அன்பனே என் சிறை மீளுமப்பா.

போற்றியே உன்னை இரவுபகலாகப்
புண்ணியனே நானும்பாடுகிறேன்
தேற்றவே வள்ளி தெய்வானையுடன் வந்து
செந்தில் வேலா சிறை மீளுமப்பா.

பௌத்திரமாக எனைவைத்துப் பூட்டியே
பலவாறு துன்பம் புரிகிறார்கள்
கயிற்றுக்கு இரையாகப் போகு முன்னே வந்து
கந்தா! என் சிறைமீளுமப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.மா.கேதாரபிள்ளை இயற்றிய மற்றொரு நெடும்பாடல் 'வளரும் பிள்ளைகளுக்கான மறியல் வீட்டு அம்மானை' - சற்று வித்தியாசமானது. இதுபற்றி புலவர் பின்வருமாறு குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. "இலங்கையில். எத்தனை சிறைச்சாலை இருக்கிறது என்றும் படுக்கை, குளிப்பு, சாப்பாடு, அடைக்கும்விதம், இறக்கும் விதம், கட்டிடங்கள், எப்படி அடைக்கப்பட்டு இருக்கிறது என்றும் மறியல்காரனை எப்படி நடத்துகிறார் என்றும் தூக்குத்தீந்தவரை எப்படி நடத்துகிறார் என்றும் எல்லாம் விரிவாய் எழுதப்பட்டு இருக்கிறது."

மேற்கூறிய விடயங்கள் பற்றிமட்டும் இவ் அம்மானை விவரிக்கின்றது என்பதன்று. புலவர் வார்த்தையில் கூறினால், "தான்தோன்றீஸ்வரன் அருளால் பிறகு ஒருமேடர்கதை. மணியன் சின்னான் என்று இரண்டுபேர் இவர்கள் ஆளையாள் துப்பாக்கியால் சுட்டு இறந்தவர்களுக்கு என்ன நடக்கிறது என்றும் சுட்டவர்க்கு என்ன நடக்கிறது என்றும் இறைவன் அருளால் எழுதப்பட்டு இருக்கிறது, வளரும் பிள்ளைகள் படிக்கும் மறியல் வீட்டு அம்மானை" இவ்விதத்தில், ஆசியுரை வழங்கிய மானாகப் போடி ஐயர் பின்வருமாறு கூறியிருப்பதும் கவனத்திற்குரியது. "இதில் பாவத்தின் பயன் என்ன என்றும் தண்டனை, குற்றம், மறியல்வீட்டின் தன்மை அதற்குள் செல்லாமல் இருக்கும் வகைகள் என்பனபற்றி கூறுகின்றார்"

அது எவ்வாறாயினும் வாய்மொழிப் புலவர் பாரம் பரியத்திலே வந்த இன்றைய தலைமுறையினரது சமூகப்பார் வையின் விரிவும் நோக்கமும் எவ்வாறமைந்துள்ளது என்பதே இங்கு எமது கவனத்திற்குரியதாகின்றது.

### வசைபாடுதல் / அறம்பாடுதல்

மேற்கூறியவாறான செயற்பாடுகள் தமிழ் சமூகத்தில் நீண்டகாலமாக நிலவிவருகின்ற விடயங்களாகின்றன. குறிப்பாக காளமேகப்புலவர் முதலான விஜயநகர, நாயக்கர்காலப் புலவர்கள் பலர் இவ்வாறான விடயங்களைப் பாடுபொருள் களாக்கியுள்ளனர். இக்கால வாய்மொழிப் புலவர்களிடமும் இவ்வாறு பாடும் மரபு இருந்துவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொட்டை வேலாப்போடியார் தாம் இளைப்பாறுகின்ற மரத்தினை தமது ஊரிலுள்ள செல்வந்தரொருவர் வெட்டுவித்த போது பின்வருமாறு பாடியிருக்கின்றார்; (செல்வந்தர் சில நாட்களின் பின்னர் இறந்துவிட்டதாக ஊரிலுள்ளவர்கள் கூறுகின்றனர்.)

முத்தர் பாண்டியர் மூவர் இருக்கின்ற
மத்தியான மருத நிழல்தனைக்
கத்தி கொண்டவன் கந்தற வெட்டினான்
சக்தி வேலவன் தலையற வெட்டுவாய்

ஏறாவூர் வாசியான தம்பிலெவ்வை அண்ணாவியார், தமது ஊரிலே செம்பு களவெடுத்தவன் மீது இவ்வாறு பாடியிருக்கின்றார்:

"சுளகு களவெடுக்கும் தோசி - உன்
சுறட்டலி என்னும் நாமம் வீசி
உரலை உருட்டுவதும் லேசி - நீ
உலக்கை களவெடுத்தால் நாலுகாசி

தென்னை மரத்தில் ஏறக்காகம் - கொத்தித்
தின்னத் தெரியும் செம்பின்வேகம்
நளவன் தொழில் எடுத்தாயே
நம்பி எடுப்பதெல்லாம் சீலம்பாயே"

(இக்கள்வனும் சில நாட்களின் பின் இறந்து விட்டதாகக் கூறப்படுகின்றது)

முன்னர் அறம்பாடுகின்ற செயலிலீடுபட்ட முஸ்லீம் புலவர்களிட மிருந்து அவ்வாறான பாடல்கள் பற்றியறிவது (அவற்றைத் தெரிவிப்பதும் பாடுவதும் பாவம் என்று கருதுவதால்) கடினமானதொன்றாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இதிகாசக் கதைகளும் வரலாறும்

இதிகாசக் கதைகளை நல்லறிவு புகட்டுவதற்காகவும் பொழுது போக்கிற்காகப் பயன்படுத்துவதற்காகவும் பாடிவருகின்ற மரபும் வாய்மொழிப்புலவர்களிடம் காணப்படுகின்றது. களுவாஞ் சிக்குடியைச் சேர்ந்தவரான கவி கனக சபைப்பிள்ளை பாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாஞ்சாலி சுயம்வரம்' இத்தகையதொன்று.

வரலாற்றுடன் தொடர்புபட்ட கதைகளும் இவர்களால் பாடப்பட்டுள்ளன. கண்டி அரசனுடன் தொடர்புபட்ட காதற்கதை யொன்று பற்றி - மட்டக்களப்பில் வாழ்ந்த பூசணியாள் என்பவள் மீது அரசன் கொண்டகாதல் - 'பூசணியாள் கதை' யாகப் பாடியிருக்கின்றார், கவி கனகசபைப்பிள்ளை.

மேற்கூறியவாறான கதைப்பாடல்கள் ஊஞ்சலாடும் வேளைகளில் (குறிப்பாக, சித்திரைப் புத்தாண்டுக்காலத்தில்) பொழுதுபோக்கிற்காகப் பாடும் வழக்கமிருந்து வந்துள்ளது. இவ்வாறான ஊஞ்சல் பாடல்களினூடாகவே கண்டியரசனாக விளங்கிய இராசசிங்கன் பற்றி தான் அறிந்து கொண்டதாக ஈழத்துப் பூராடனார் குறிப்பிட்டிருப்பதும் இவ்வேளை நினைவு கூரப்பட வேண்டியது

வரலாற்றுக் கதைகள் பற்றி மட்டுமன்றி மட்டக்களப்பின் பூர்வீக வரலாறு பற்றிக்கூட - பூர்வீக வரலாறாக தான் அறிந்து வைத்திருப்பவைபற்றி - பாடலாகப் புனைந்து பொதுமக்களுக்கு முன்னால் பாடிவந்துள்ளார், கன்னன்குடா சிதம்பரப்பிள்ளைப் புலவர். அன்னார் பாடிய 'மட்டக்களப்பு வரலாற்று அம்மானை யிலிருந்து ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது:

போற்றியே அம்மானை புகலுகிறேன் கேளுமினி
நாற்றிசையும் பேர்விளங்கும் நல்லவரகடையில்
வேற்றரசர் தாழ்பணிய வேந்தன் கலிங்கனுமே
ஏற்றபுகழ் பெருக எல்லை எங்கும் ஆண்டிருந்தார்.

எல்லை எங்கும் ஆண்டு இவர் இருக்கும் நாளையிலே
சொல்லரிய மாநாகர் மகளான கண்ணகிக்கு
நல்லசிலம் பதற்கு நாகமணி தானெடுக்க
வல்லபுகழ் மீகாமன் வருகின்ற வழிதனிலே

வழிமறித்து மேகலிங்க ராசனிட ஏவலர்கள்
அழிமதிகள் செய்தவிதம் அறிந்தல்லோ கண்ணகியாள்
கண்ணகியாள் சினந்து கடியசாபம் இட்டதினால்
மண்ணை யரசாண்டிருந்த மன்னன் கலிங்கனுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணவரும் புகழும் வீரன்படை யாட்சியொடு
நன்னயஞ்சேர் ஓடமதில் ஏறிச்சில பேருடனே
பேரான நாடுவிட்டு வாறார் கடல் வழியே
சீராக இன்னமொரு செய்திநான் சொல்லுகிறேன்

நேராய் இலங்கையிலே நெடியகடல் தான்வளைந்த
பாரெங்கு மேபுகழும் பாங்கான கீழ்த்திசையில்
கீழ்த்திசையி லேதிமிலை தீவென்னும் மாநகரில்
ஆத்தருகிலே திமிலர் அன்பாகவாழ்ந் திருந்தார்

நேர்த்தியாய் அவ்வூர்க்கு நேரானதென் திசையில்
சாற்றுவேன் மணற்காட்டு வேடர்கள்தான் சிலபேர்
மணற்காட்டு வேடுவர்கள் மகிழ்வாக வாழ்ந்திருந்தார்
இணக்கமுட னவர்க்கு இயல்வாய்ச் சரக்குவகை

சரக்குவகை பலவுந்தானேதுலுக் கர்களும்
மரக்கலத்தில் ஏற்றிவந்து மணற்காட்டு வேடுவர்க்குக்
கொடுத்தே திமிலருக்கும் கொள்வனவு தானேற்றி
எடுத்தே திரும்பியவர் ஏகிவருகை யிலே

வரும்போதி லேகடலில் வந்தகலிங்க மன்னன்
விரும்பியே பட்டாணி மாரைஅரு கழைத்து
எங்கிருந்து வாறீர்கள் என்றுராசன் கேட்டிடவே
மாங்களமாய்க் துலுக்கர் மன்னனிடம் உரைப்பார்

அங்கே ஒரு திடலில் ஆன திமிலர்களும்
தங்கி மணற்காட்டு வேடுவரும் வாழுகின்றார்
நாங்கள் அவர்களுக்கு நலமுடனே சாமான்கள்
பாங்காயக் கொடுத்து அவர் கொடுத்த பொருளதனை

வாங்கியே தான்போறோம் வகைவிபரந் தான்கேட்ட
நீங்கள் யார்என்று நிகழ்த்துவீர் எங்களுக்கு
என்றல்லோ பட்டாணிமார்கள் இவை உரைக்க
நன்றாகவே கலிங்க ராசனுமே தானுரைப்பான்

கேளுங்கள் பட்டாணி மார்களே என்நகரம்
நாளும் வளங்கொளிக்கும் நல்லகலிங்க நகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரமதை விட்டுஅல்லோ நாங்களொரு காரியமாய்
திகழும் கடல்வழியே திரிந்தலைந்து தான்வாறோம்

வாருங்கள் நீங்களுந்தான் உரைத்த இடந்தனுக்கு
சேருவோம் அங்கிருக்கும் செய்திதனை அறிந்து
அறிந்து வருவோமென்றவர்களையுமே திருப்பி
செறிந்த கடல்வழியே சென்றார் வெகுதூரம்

சென்றார் வெகுதூரம் தென்திசையின் ஓரமதாய்
நன்றாகவோர் கால்வாய் நாடியே ஓடிவர
கண்டார் கலிங்கமன்னன் கடல்வழியே ஓடமதைக்
கொண்டுசென்றார் தூரமதைக் கண்டுவர வேணுமென்று

வேணுமென்று ஓடமதை வேந்தர்விட்டுப் போகையிலே
காணுங்கரை யதற்குமேலே களப்பாகத்தானே
தெரிகிறதைத் தார்வேந்தன் கண்டுமப்போ
நானே இதற்கு நவிலுவேன் பேரெதென்று

மட்டுக்குமட்டா அப்பாலேதான் களப்பு
மட்டக்களப்பு என்று மன்னன்கலிங்க னவர்
இட்டமுடன் பெயரோ இதற்கிட்டார் அன்னாளில்
திட்டமிட்டுத் தானவர்கள் திரும்பி வந்து மண்முனையில்

மண்மேடதில் உயரமாய் இருந்த காரணத்தால்
மண்முனை என்றுபெயர் வைத்தல்லோ மன்னவர்கள்
நன்னயமாய் அவ்விடத்தில் நாடியே கூடாரமிட்டுத்
தின்னமுடன் இருக்கத் திமிலர் இதைஅறிந்து

அறிந்தே திமிலர்களும் அதட்ட இவர்களையே
செறிந்தே திமிலர்களைத் துரத்தவே வேணுமென்று
துரத்தவே பட்டாணி மாரைத் துணையாக
வரச்சேர்த்துமே திமிலர் வாழ்ந்தநகர்தனிலே

சென்று புகுந்துமங்கே திமிலர்களைத் தான்மடித்து
அன்றுசமர்க் காற்றாமல் அலறியே சென்றவரைக்
கொன்று வெருகலுக்கு அப்பாலே தான்விடுத்து
நன்றாக அங்கொருகல் நாட்டிக் கலிங்கமன்னன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று திமிலர்களை மீண்டுவரு கையிலே
கண்டார்கள் பத்திளன்னுங் கன்னிதனை இவர்கள்
பத்திதன்னை வெட்டியங்கோர் பாலைமரந் தனிலே
செத்திடவே தூக்கியவர் திரும்பி வருகையிலே

எத்திசையு மேயிருந்து ஏகிவந்த பேர்களெல்லம்
சுத்திவந்து ஓரிடத்தில் சூழ்ந்தார்கள் எல்லோரும்
வந்தஇரு படையும் சந்தித்தகா ரணத்தால்
சந்தித்த காரணத்தால் சந்திவெளி என்றுசொல்லி

அந்தஇடந் தனக்கு அன்புடனே பேருமிட்டு
விந்தையுடன் திரும்பி விரைந்துவந்து ஓரிடத்தில்
வந்துகளை யாறியதால் வந்தாறுமூலை என்று
என்றுஅதற் கிணங்க ஏற்றபேர் தான்கொடுத்து

நன்றாக வேதிரும்பி நாடிவரு கையிலே
சத்துருவைக் கொண்டஇடம் சத்துருக்கொண் டான்எனவே
சித்தம் மகிழ்வாகச் சிறந்தபேர் தான்கொடுத்து
மெத்த விரைவாக மேவித் திமிலைநகர்

செத்த திமிலர்களின் தேவிமார் மக்களையே
பட்டாணி மார்களுக்குப் பரிவாய் மணம் முடித்து
இட்டமுட னவர்க்கு இருக்கஇடமுங் கொடுத்து
சட்டமுடன் முன்குடியூர் ஏறாவூர் என்றுரைத்து

மட்டக்களப்பதிலே மகிழ்வாக வாழுமென்று
திட்டமிட்டு மேகலிங்க ராசனுமே யப்போது
கட்டழகு மன்னன் கலிங்க மகாராசன்
மன்னவனும் மண்முனையில் மகிழ்ந்து குடியேறி

இன்னமுந்தன் சேனைகளை இங்கே வரவழைத்து
சென்னெல்பயிரிடுகை செய்தொழிலுந் தான்பிரித்து
வன்னமுடன் ஏழுகுடி யாகவே வகுத்து
ஏழுகுடி யார்க்கும் ஏவலது செய்திடவே

ஆளும் வகுத்துவைத்து அவர்க்கும் வரிசையது
நாளும் தவறாதபடி நடக்கவே தான்வகுத்து
வாழுகின்றார் மண்முனையில் வளமைகளைக் கேளுமினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு பிரதேசத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவுள்ளது, தாந்தாமலை, இதுபற்றி 'தாந்தாமலை வரலாற்று அம்மானை' பாடியுள்ளார், ந.மா.கேதாரபிள்ளை.

மட்டக்களப்பு வரலாறு எழுதப்படுகின்றபோது இவ்வாறான வாய்மொழிப் புலவர்களால் பாடப்பட்டுவந்த - பாடப்பட்டு வருகின்ற - ஆக்கங்கள்பற்றிக் கவனிப்பது மிக அவசியமானது என்பது கூறாமலே விளங்கக்கூடியது.

**கோலாட்டப் பாடல்கள்**

வழிநடைச் சிந்துகள் இவ்வகை வாய்மொழிப் பாடல்களாவது போன்றே கோலாட்டப்பாடல்களும் அமைந்துள்ளன. அதாவது, கோலாட்டங்களிலே படிப்பதற்காக எழுதப்படுகின்ற வாய்மொழிப் பாடல்களும் குறிப்பிட்ட கால சமய, சமூக, அரசியல், பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவைபற்றி கலாநிதி ரமீஸ் அப்துல்லா விரிவாக எழுதியுள்ளார். இறக்காமம் மர்ஹூம் ஆதாம்லெவ்வை கருதுலெவ்வை புலவர் இவ்வாறான பல பாடல்களை எழுதியிருக்கின்றார். ஊருக்கு பஸ் வருதல், மழை வேண்டுதல், கலிகால மாற்றங்கள், யானை பிடித்தல் முதலான பல்வேறு விடயங்கள் இவ்வாறாகப் பாடப்பட்டுள்ளன. அவரது காலத்திலே நடக்கவிருந்த 'தேர்தல்' பற்றியது பின்வரும் பாடல் :

அடி புடி சண்டையுமாகுதே - ஊரில
ஆழுக்காள் போட்டி உண்டாகுதே
போட்டுத் துலங்கிய நாளாக - ஊரில
காட்டும் புதுமெயப் பாருங்கோ

காறுக்கு காறது பட்டதாம்
அதன் கண்ணாடி
ரெண்டா ஒடஞ்சுதாம்
வோட்டு தொவங்கிடும் நாளாக
ஊரில் காட்டும்
புதுமெயப் பாருங்கோ

(அடிபுடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்து நடக்கிற சிற்றூரு
இறக்காமம் படுகிற பாட்டப் பார்
சந்திக்கிச் சந்தி கூடினால் - பெரும்
சண்டையில் தக்கமுமாகுதே
(அடிபுடி)

இலக்கிசன் கடையிது பாருங்கோ - ஊரில்
இளந்தாரிப் பொடிகளும் வாருங்கோ
வெற்றிலை பாக்கோடு தாம்புலம் - இன்னும்
வேண்டிய சாமானக் கேளுங்கோ

(இவ்வாறான பாடல்கள் இறக்காமம் பண்பாட்டுப் பாடல்கள் என்ற பெயரிலே லரீப் சுலைமான் என்பவரால் தொகுக் கப்பட்டுள்ளன. இறக்காமம் பிரதேச செயலகம் அவற்றை நூலுருவாக்கியுள்ளது, 2011)

மேற்குறிப்பிட்ட புலவர் மழை வேண்டுதல் பற்றிப்பாடிய பாடல் பின்வருமாறு:

தரு
தெந்தி நதி நாதி நதி
நாதி நதி நானா
தினநாதி நாதந்த
நாதந்த நானா
தெந்தி நதி நாதி நதி

நாதி நதி நானா
தினநாதி நாதந்த
நாதந்த நானா

பாடல்
உலகமது தளதளா
நடக்குதே றப்பு
உள்ளபடி சொல்கிறேன்
பொன்னாரே கேளும்
(தெந்தி நதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளியரும் காளையரும்
சொல்ல முடியாது
காட்டுறான் கோமானன்
கோபமது ஊன்றி

(தெந்தி நதி)

வளமது குளமில்லா
வட்டையது செய்தோம்
வல்லவா உன்னோடு
வெல்லமுடியாது

(தெந்தி நதி)

இருட்டிய மழையெல்லாம்
ஏற்றியே போகுது
விதி என்ன பெரியவா
ஏக பெரியோனே

(தெந்தி நதி)

சேகுவொலி அப்பாட
சித்தி கிடையாதோ
செப்பமுடன் நம்மூரில்
செல்வமடையாதோ

(தெந்தி நதி)

பாவுலகு வயதாழி
இளமை பெறுகாதோ
படைத்தவா உனைநாடி
காவியம் உரைத்தேன்

(தெந்தி நதி)

நிலமது செழிக்க
மழை நீ அருளுவாயே
நித்தனே என்னாவில்
வெற்றி தருவாயே

(தெந்தி நதி)

மழைவேண்டிப் பாடுகின்ற மேற்குறிய மரபு தொன்மையானது.

இன்றைய நவீன நாகரிகத்தை கலிகாலமாற்றமாகக் கண்டு அவர் இவ்வாறு பாடியிருக்கின்றார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி நெல்லு சாக்குகளும்
கம்பிகளும் களவெடுத்து
பெண்பிள்ளைக்கு சோறு கொடுங்க
வேணுமோ - இவன்
ஆண் பிள்ளை போல்
ரோட்டில் வரல் ஆகுமோ

வாது போட்டு சூதடிக்க
காசி தட்டுப்பட்டவுடன்
கூட்டில் உள்ள கோழிகளை
தூக்குவார் - ஒரு
கொம்பனியாய் சேர்ந்து
தொழில் செய்குவார்

சாரணும் சிலுப்பர்களும்
சட்டை புள்க்கை ஒப்பன் சேட்டும்
மாட்டியேவருவார் - இவர்
ரோட்டிலே பட்டியாக சேருவாரே.

**பக்தி உணர்ச்சி**

ஈழத்தின் அனைத்துப் பிரதேச வாய்மொழிப்புலவர்களும் தமது பக்தியுணர்ச்சியை ஓயாது வெளிப்படுத்திவருவதற்கு தயங்கினாரல்லர். வழிபாட்டிற்குரிய தலங்களை முதன்மைப் படுத்தி தலப் பெருமைகளை எடுத்துரைப்பதோடு தமது பக்தி மேம்பாட்டினையும் வெளிப்படுத்துவது அவர்களது பாடல் வெளிப்பாட்டு முறைமையாகின்றது. ஊரிலுள்ள தலங்களோடு, தூர இடங்களிலுள்ள கதிர்காமம் முதலான தலங்கள் மீதும் அவர்கள் பாடிவந்துள்ளனர். ம.நல்லதம்பி என்பவர் ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் பேரில் பாடிய தோத்திர மாலையில் ஆரம்பப் பாடல்கள் பின்வருமாறமைகின்றன:

அரனுமைக்கு முதல் மகனாய் வந்துதித்து
அமரர்களும் முறையிடவே அன்று சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர மிகுந்த கயமுகனை வதை செய்யாது
வலு வடக்கி அமரர் பயந் தீர்த்த நாதா
உர மிகுந்த வேதனை தான் பொறுக் கொணாது
ஓல மிட்டகுர லோசை கேளாதோ மால்
மருகனே மேனியெல்லாம் நோகுதையா
மாமாங்க தேசிகனே யருள் செய்வாயே.

ஆலையின் வாய்க் கரும்பது போல் நொந்து வாடி
ஆதரிக்க ஒருவரின்றித் தவிக்கும் வேளை
சீலமுடன் அருகிருக்கும் சித்தி முத்தி
திரும்பி என்னைப் பாரென்று சொல்லாதேனோ
பாலமிர்த முண்டு செவி மந்தமாகிப்
பார்ப்பதற்கு மனமின்றி இருந்திட்டீரோ
மாலையணி மேனி யெல்லாம் நோகுதையா
மாமாங்க தேசிகளே யருள் செய்வாயே.

இரு தோளுங் காவடியைத் தூக்கி வைத்து
எலுமிச்சங்கனி தனிலே வேலுங்குத்தித்
திரு முதுகில் முள் வரிசையிட்டு பின்னே
செடிக் கயிற்றைப் பிடித்திழுத்து நடக்கொட்டாமல்
பெருமை மிக மலகுமது வாயிலிட்டால்
பெருந் துயரம் மைந்தரது பொறுக்கலாமோ
அருள் நிறைந்த மேனியெல்லாம் நோகுதையா
மாமாங்க தேசிகனே யருள் செய்வாயே.

ஈன்றெடுத்த கன்றதுவைக் காணா விட்டால்
என் படுமோ கறவையது போல நானும்
மீண்டு முந்தன் திருவழகைக் கண்ணாற் காண
விரும்பியுந்தன் பதியிலுன்னைத் தேடி வந்தேன்
தூண்டி லிட்டமீனது போல் நெஞ்சம் வாடித்
துடிக்குதையா என் கண்முன் தோன்ற வாரும்
மாண்டிடவோ மேனியெல்லாம் நோகுதையா
மாமாங்க தேசிகனே யருள் செய்வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயசமரச நோக்குடன் பாடுகின்ற புலவர்களுமுள்ளனர் இத்தகையயோருளொருவரான சின்னவப்புலவர் பாடியவை இவை:

செங்கற்படை மீனாட்சியம்மாள் காவியம்

பணிவாளர்கள் ஆலைமரம் வடபக்கமாக
பத்தினியே ஐந்தடித் தூரத்திற்கப்பால்
துணிவாகப் பாரொரு பெருங்கல்லது தோணும்
தொகையேயிது கீழ்நோக்கி வந்தகல் என்பர்
அணியாக எழுதியிருப்பதைப் பார்த்தால்
அழகான தமிழ் எழுத்தென்று சொல்வார்
தணிவான மீனாட்சி அம்மனுடை ஆலையந்
தழைத்தோங்கு செங்கற்படைவாழி

நாகூர் மீரானாண்டவர் பேரில் ஊர்சுற்றுக் காவியம்

தங்குதே மழைமாரி குறை வாயிருக்குதே
தண்ணீர் - தண்ணீர் ரென்று சனமது தவிக்குதே
பொங்குதே வெயிலது நற்பிட்டி முனையிலே
பிள்ளைபசு மாடாடு பெற்றாறை நோக்குதே
கங்குலை நிகர்த்ததொரு காளை முகிலில்லையோ
கரைவாகு வெளிநிறையக் கருணையது தாராய்
பங்கமில்லாததொரு நாகூரு சாய்புவே
பனிமேகம் மழைபொழியும் கிருபைசெய் அல்லாஹ்

பரிசுத்த பாத்திமா பவனி

திருவளர் கிருபையிற் போர்த்துக்கல் தேசத்தில்
சிறுபிள்ளை மூன்று பேர்க்கு
தரிசன மளித்துமே வாக்குகள் ஈந்துமே
திருவளர் ஈயும் பாத்திமா

## ii) மலையகப் பிரதேசம்

ஏனைய பிரதேச வாய்மொழிப் புலவர்களுடன் ஒப்பிடுகின்றபோது மலையகப் பிரதேச வாய்மொழிப்புலவர்கள் சமூக உணர்வுமிக்கவர்களாகக் காணப்படுவது விதந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைக்கப்பட வேண்டியதே. அன்றாட வாழ்க்கை முறை கற்பிக்கும் பாடங்கள், தொழிற்சங்கங்களின் செல்வாக்கு, தமிழகத்தொடர்பு, புலப்பெயர்வு, அனுபவச் சேமிப்பு முதலியன அதற்கான காரணங்களாகலாம். இப்பிரதேச வாய்மொழிப் புலவர்களது பாடுபொருள்களாக பின்வருவனவற்றை இனங்காணமுடிகின்றது: i) வீடற்ற நிலைமை ii) மதுபாவனை iii) தொழிலாளர் நிலை vi) தோட்ட நிகழ்வுகள் vii) தொழிற்சங்கப் பிரச்சாரம் viii) பிரஜாஉரிமைப் பிரச்சினை ix) மலையக வரலாறு x) அரசியல் விமர்சனம் xi) பக்தி

**வீடற்ற நிலைமை**

ஈழத்துத் தமிழ் பேசும் மக்களுள் தனித்துவமான சமூகப் பிரச்சினைகளைக் கொண்டுள்ளவர்களாக மலையக மக்கள் திகழ்கின்றனர். இத்தியாதி விடயங்களுள் சொந்தமாக வீடில்லாத நிலைமை முதன்மையானது. லயன்கள் எனப்படும் தொடர் குடியிருப்புகளே - அதுவும் தற்காலிகமாக - அவர்களது வசிப்பிடங்களாக இருந்து வந்துள்ளன; (அதிக மாற்றங்களின்றி இன்றும்) இருந்துவருகின்றன.

மேற்கூறிய பிரச்சினைபற்றி நூற்றுக்கணக்கான படைப்புகள் வெளிவந்திருப்பினும் வாய்மொழிப் புலவர் (ஏ.எம்.ராமையா தேவருடன் இணைந்து) வி.எஸ்.கோவிந்தசாமி தேவர் பாடிய பின்வரும் பாடல் மகத்தானபடைப்பு என்று துணிந்து குறிப்பிடலாம்:

## எல்லாம் அதுக்குள்ளே

உழைத்துக் கொடுப்பதும் தொழிலாளி - ரத்தம்
உறிஞ்சு குடிப்பதும் முதலாளி

ஏழைத் தொழிலாளர் ஏமாளி - இனும்
ஏமாறித்திரிகிறான் கோமாளி

பத்தடிக்காம்பரா வீட்டிலே - மக்கள்
படுங்கஸ்டம் பாருங்க பாட்டிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயும் தகப்பனும் அதுக்குள்ளே - மேஜர்
ஆகிய தலைப் பெண்ணும் அதுக்குள்ளே

மாமனும் மாமியும் அதுக்குள்ளே - சொந்த
மருமகனும் மகளுமே அதுக்குள்ளே

அக்காளும் தம்பியும் அதுக்குள்ளே - பெரிய
அண்ணன் பொண்டாட்டியுமதுக்குள்ளே

விருந்தாடி வந்தவர் அதுக்குள்ளே - இனும்
வீரப்பன் குடும்பமும் அதுக்குள்ளே

சடங்குகள் ஆவதும் அதுக்குள்ளே - பச்ச
குடிசைகள் அமைப்பதும் அதுக்குள்ளே

குழந்தைகள் பெறுவதும் அதுக்குள்ளே - சதா
கொஞ்சி மகிழ்வதும் அதுக்குள்ளே

அடுப்புகள் இருப்பதும் அதுக்குள்ளே - தோசை
ஆப்பங்கள் சுடுவதும் அதுக்குள்ளே

மண்டுகள் வைப்பதும் அதுக்குள்ளே - மாடன்
மருளாகிக்குதிப்பதும் அதுக்குள்ளே

சங்கம் பேசுவதும் அதுக்குள்ளே - நாமள்
சாமி கும்பிடுவதும் அதுக்குள்ளே

செஞ்சேவல் வெண்கோழி அதுக்குள்ளே - பூனை
செம்பாரை நாய்க்குட்டி அதுக்குள்ளே

விம்மலும் பொருமலும் அதுக்குள்ளே - சதா
விசனப்பட்டிருப்பதும் அதுக்குள்ளே

தும்மலும் துரத்தலும் அதுக்குள்ளே - எச்சி
தாம்பூலக் குவளையும் அதுக்குள்ளே

முதலாளிமார்களின் சதியப்பா - வேறே
கெதியில்லை நம் தலைவிதியப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதுபாவனை**

மலையகத்தில் நிலவுகின்ற முக்கியமான பிரச்சினைகளுள் மதுபாவனை மிகமுக்கியமானது என்பதில் ஐயமில்லை. இதுகாரணமாக, குடும்பங்களுக்கிடையயேயும் வெளியிடங்களிலும் பாரதூரமான சம்பவங்களும் இடம் பெற்று வந்துள்ளன. வாய்மொழிப்புலவர்களையும் அவை ஈர்த்திருப்பது தவிர்க்க வியலாததே. பதுளையைச் சேர்ந்தவரான கே.கே.எஸ்.ஜில் பாடிய பாடலொன்று குடியால் ஏற்படும் விளைவுகள் பலவற்றை விவரிக்கின்றது அது பின்வருமாறு:

குடியைக் கெடுத்த குடிகாரன் பாட்டு

(பெண்)

என்னா சொன்னாலும் செவியில் ஏறலியே சாராயத்தை
முன்னும் பின்னும் யோசியாமல் மூன்று வேளை நீ குடிக்க
நான் சொல்லுவதைக் கேளு சீச்சீ நமக்குப் பிள்ளைகள் ஏழு.

(ஆண்)

அடிப்பிள்ளை இருந்தாலென்ன கள்ளியைப் போல் முளிக்க
வேண்டாம்
வெள்ளி வெளுக்க முன்னே வேலைக்கு நான் போய் விடுவேன்
மிரண்டிப் பேசாதே உன்னை விரட்டி அடிப்பேன் அங்கு

(பெண்)

அடப்பிள்ளைகிட்டத் துணியுமில்லை அள்ளித்திங்க சோறுமில்லை
கள்ளனைப்போல் முளிக்காதேடா கடன்தந்தவங்க கேக்கும் போது
உனக்கு வந்தகேடு நீ எடுப்பதே திருவோடு

(ஆண்)

ஓடு எடுத்தாலென்னா ஊருராபோனாலென்னா
கேடுகெட்டு அலைந்தாலென்னா கெட்டவேச ஓடிப்போவேன்
ஒன்னால் என்னா ஆகும் ஓங்கப்ப பணமாபோகும்

(பெண்)

அப்பன் ஆயா என்று சொல்லி அவர்கள் பேச்சிபேசவேண்டாம்
தப்பாமலுனக்கு இப்ப சனியன்வந்து ஆட்டுமடா
சீரலிஞ்சமாடா என் சீட்டுக்காசைத்தாடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆண்)

அடி ஈட்டுக்கடையில் போயி எடுத்துவந்த நகைகளுக்கு
ஓங்க பாட்டனா காசு கொடுப்பான் பத்திரம் இனி பேசாமல்ப்போ
பாலுக்காசு எங்க உன் பவரைக்காட்டாத இங்க

## தொழிலாளர் நிலை

மலையக வாய்மொழிப் புலவர்கள் பலரும் மலையகத் தொழிலாளர்கள் நிலை பற்றிப் பல்வேறு கோணங்களிலும் பாடல்கள் இயற்றியுள்ளனர். அவலம் மிகுந்த தொழிலாளரது அன்றாட வாழ்க்கை நிலை ஆழமாகவும் விரிவாகவும் அவர்களால் அவதானிக்கப்பட்டிருப்பது கண்கூடு. அவர்கள் வெளியிட்ட பிரசுரங்களின் தலைப்புகள்கூட 'இலங்கைத் தொழிலாளராது இம்சைக்குரல் (M.P. வேல்சாமி), தொழிலாளர் துயரம்' (S.பெரியக்காள்), 'தொழிலாளர் இதயசீதம் (எம்.ஏ. கிராகவன்), தொழிலாளர் கீதம்' (எம்.வீ.பழனியாண்டி) என்றவாறமைந்திருப்பது கவனத்திற்குரியது.

காசி.ரெங்கநாதன் இயற்றிய பாடலொன்றின் ஒரு பகுதி பின்வருமாறுள்ளது:

பட்டகடன் கடைகடைக்குச் சும்மா கிடக்குது - அந்த
பாக்கிக்காரன்க பேசுறபேச்சு வெக்கமாகிடக்குது - என்
சம்பளத்தையுந்தான் சேத்துப்புடுங்கிகுடிச்சு முடியுது - இந்த
சனியம்புடிச்சமனுசனை விட்டுநான் என்னக்குத் தொலைவது - (சிட்டு)

ஒலையை ஊத்தி அடுப்பில் வச்சேன் கொதிச்சுக்கிடக்குது - இந்த
ஒத்தக்கடை போய்வர்றேன்ன மனுசன எப்பத்தான்வர்றது - இந்த
ஒட்டாரகாரப்பய பெத்தபுள்ளைக் கத்தியுந்தொலைக்குது - நானொங்கிட்டு
ஓடித்தான்போகலா மென்றாலும் காலந்தான் நல்லாவா இருக்குது

அழுகும்பிள்ளையை அமத்திப்பாத்தாலும் அடங்கமாட்டங்குது அது
அப்பனைப் போலவே தப்பாமப்பிறந்து என் ஆவியைப் போக்குது
எப்பஇந்தக்குடி கேடனுக்கு நல்லபுத்தி திரும்புவது - இந்த
ஏழெட்டுப்பிள்ளையுங் காப்பாத்தி என்னக்கி ஆளோடநான் சேர்வது - (சிட்டு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமிக்குப்போட்ட உண்டியலுந்தான் தடவி முடிஞ்சுது - இந்த
தாண்டவமாடினா வீடுதான் எப்படி விருத்தியாகுமது - நான்
சீட்டுப்போட்டு ஒருசரடுசெஞ்சதம் ஈட்டி லேகிடக்குது - இந்த
தட்டுக்கெட்டது கட்டுச்சேதாலி அதுதான் கிடந்தாட்டுது - (சிட்டு)

புலவர் எம்.எஸ்.மாரிமுத்துவின் பார்வை இவ்வாறமைகின்றது:

தோட்டத்தொழிலாளர்களே உங்களுக்கு வந்திருக்கும்
சூழ்நிலையை எண்ணிப்பாருங்க - சில தோட்டத்திலே
துரைத்தனமும் ரெண்டுதானுங்க... கல்.பொ.கட்சி

நாட்டுரிமை ஓட்டுரிமை நல்ல பிரஜா உரிமை
நாளடைவில் ஒன்றுமில்லீங்க - தொழிலாளர்க்கு
நம்பிக்கையும் அற்றுப்போச்சுங்க... கல்.பொ.கட்சி

வேலை நிருத்தம் பல வேலையில்லாத் திண்டாட்டம்
துப்பாக்கி சூடு வேறுங்க தொழிலாளிக்கி
தொல்லைபல எண்ணிப்பாருங்க... கல்.பொ.கட்சி

மாதா மாதம் சந்தப்பணம் மக்களிடம் வசூல் செய்து
ரொக்கமாக கொண்டு செல்லுரார் - செயலாளரிடம்
கணக்கு கேட்டா சங்கம் வேறுங்க. கல்.பொ.கட்சி

தொழிலாளர் வாழ்க்கையை இன்னொரு விதமாகப்பார்த்துள்ளார், M.S.கிருஷ்ணம்மாள்:

சாப்பாட்டிற்கு ஒன்றுமில்லேனாலும் அண்ணன் மார்களே
நம்ம சங்கத்திற்கு குறைவே இல்லே அக்காள் மார்களே

குடித்துவிட்டு ஆடுரதும்
கோளுகுண்டுனி சொல்லுறதும்
நல்லவரைப்போல் நடிக்கிறதும்
நாலு பேருக்கு கோள்வைக்கிறதும்
கள்ளுக் குடிக்கும் கச்சேரி கோட்டுக்கும்
அள்ளிக் கொடுத்துவிட்டு அடகடவுளே
நமக்கிந்தவிதியா என்று வருந்திகிட்டு
வீட்டிலே சமைக்க அரிசி இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்ம வீராப்புக்கு மட்டும் குறைச்சலில்ல
குழந்தைக் குட்டிக்கு உடுத்த இல்லே ஆனால் குடியை மட்டும்
மறக்கவில்லே
வீட்டிற்குள்ளே பொம்பளைகிட்ட வீராப்பு பண்ணுறதும்
வேசை தாசி என்று அவர்கள் வீராப்பைக் காட்டுரதும்

கட்சிகளில் சேர்ந்துகிட்டு கள்ளச் சாராயம் குடிச்சிக்கிட்டு
கலவரத்தில் மாட்டிக்கிட்டு கணக்குத் தீர்த்துப் போயிகிட்டு

பெண்டு பிள்ளை தெருத்தெருவா பிச்சை எடுக்கிறதும் - நம்
பின்னாலே நின்று இன்னோரு சாதியார் கேலிபண்ணுறதும்
நாலு கட்சி ஐந்து கட்சி நமக்குத்தான் கெடுதி - இது
நம்மை ஆளும் முதலாளிக்கு ரொம்பவும் வசதி

பெண்தொழிலாளி அனுபவிக்கும் துயரங்களை விரிவாக எடுத்துரைக்கின்றார், வி.எஸ். கோவிந்தசாமி தேவர். விரிவஞ்சி, ஒரு பகுதிமட்டும் இங்கு எடுத்துகாணப்படுகின்றது.

வீறு கொண்ட கண்டாக்கு
விரட்டிடுவாரென்று
விடியுமுன்னே கூடையுடன்
பிரட்டுக் களஞ்சென்று

சோறுகறி உண்ணாமல்
தோகைமயில் நல்லாள்
சுரு சுருப்பாத் தானெழும்பித்
துண்டுவாங்கச் செல்வாள்

மாறு கொண்ட கங்காணி
கணக்கப்பிள்ளை அய்யா
மணிக் கணக்கைப் பார்த்ததுவும்
விரட்டுவதும் பொய்யா

தேறுதலோ சொல்லிடவோ
ஆளொருவரில்லை
சீறு கிறர்துர்ப் பேச்சை
நாள் தோறுந்தொல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுமொழி கேட்டிடுவீர்
தொழிலாளத் தோழா
குமரி முதலி மயம்
கொடிப்பிடித்த தமிழா

ஆக்கிருந்த சோறுகறி
அவசரமா உண்டு
அஞ்சாறு புள்ள குட்டி
பசியாறிப் பின்பு

சோக்காளி புருஷனுக்குத்
தொண்டு பல செய்வாள்
தொட்டிலிடும் பாலகனைக்
கட்டி முத்தமிடுவாள்

கைக் குழந்தைதான் தூக்கி
கக்கம திலிடுக்கி
கம்பளியைத் தான் மடித்து
பம்புத் தட்டை பிடித்து

முக்காடு தலையிடுட்டுக்
கூடை தலைமாட்டி
மூத்தபிள்ளை நச்சரிக்க
முதுகில் ரண்டுபோட்டு

................ முக்காயி
முத்துவீராயி
காத்தாயி கருப்பாயி
காளி மாரியாயி

முத்தம்மா முனியம்மா
மீனாக்ஷிசிட்டு
முருகாயி மருதாயி
பேச்சியுடன் பொட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தாளாம் ஆயம்மாத்
தாயையுமே கண்டு
அருமையுடந் தான்பெற்ற
சேயையுமேகொண்டு

சரியாகத் தொட்டிகட்டி
போட்டாட்டிப்பாத்து
தாயாரே போய் வாரேன்
என்று முகம் வேர்த்து

வரையேறிக் கொழுந்தெடுக்க
மங்கை புறப்பட்டாள்
வாய்புலம்புங் குழந்தைகளுந்
தூங்க ஒரு பாட்டால்

ஆரிவரோ நீ யாரே
ஆராரோப்போட்டு
ஆயம்மா பாடுகிற
தாலாட்டுப் பாட்டு

மாரி மகமாயி திருசூலி
உமையாத்தாள்
மதளையமுங் குரலமர்த்தி
நாள்தோறுங் காப்பாள்

நாரிமணி ஆறாநம்பர்
உச்சிமலையேற
நச்சரிக்குஞ் சில்லரைகள்
நமன் போலசீற

காரேறி பெரியதுரை
சின்னத்துரை வாறார்
கணக்குப்பிள்ளை கண்டாக்கு
அய்யாவும் போறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கரிக்குங் கங்காணி
குள்ளநரி கூட்டம்
கோபமுடங் குரங்காட்டி
ஆடுகிற ஆட்டம்

சொக்கலிங்கம் மீனாசி
பக்கமதில் நின்று
துரைமார்கள் பார்த்திருக்க
நிரை பிடிப்பாரன்று

இடிகுமுறலடைமழையுங்
கொடிய விஷக்காற்று
இலங்கு கதிரோன் குதிரை
நிலைகலங்குங் கூற்று

கிடு கிடுத்து நடு நடுங்கி
உடம்பு குளிராட்டும்
கீழுதடு மேலுதடுந்
ததிங்கிணதோம் போடும்

குடித்து திரம் ருசிகண்ட
ராம அட்டைகூட்டம்
கோபமுடனப்பிடவே
குழறி மனவாட்டம்

நெழி நெழிச்சு முளம்போடும்
அட்டைக்கடி வேதை
நெஞ்சைவிட்டு மாறாமல்
வஞ்சியிளங் கோதை

வங்கியிலை தானெடுத்து
வாதொடிச்சு நாளும்
பம்புத் தட்டைக் கம்பெடுத்து
மட்டம் பிடிப்பாளாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தலிலைதான கற்றி

முடிச்சுவாதைப்போக்கி

பக்கவாதை அக்கணமே

பக்குவமா நீக்கி

பக்குவமாக கொழுந்தெடுத்து

பாய்ந்தோடி வாறாள்

பட படத்த கங்காணி

பறந்தோடிப்போறார்

பணிஞ்ச மரம் அரும்பெடுத்தா

அநியாயத் தொல்லை

பணிந்து பதில் பேசிடவோ

ஒரு ஞாயமில்லை

துணிஞ்சு நின்று பேசிவிட்டால்

புல்லு வெட்டுக்காடு

துரைமார்கள் சட்டதிட்டம்

சொல்லமுடியாது

இன்று அவ்வாறில்லாவிடிலும் நாற்பது ஐம்பதுகளில் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வளவு தூரம் சுரண்டப்பட்டு வந்துள்ளனர் என்பதனை எஸ். கோவிந்தசாமித்தேவரது பின்வரும் பாடல் நுணுக்கமாகப் பதிவு செய்கின்றது.

கங்காணிச் சாமிக்கும் வரிப்பணம் - உதிரி

காளான் சங்கத்திற்கும் வரிப்பணம்

பொங்கலும் பூசைக்கு வரிப்பணம் - நம்ம

பூசாரி உடுக்கைக்கும் வரிப்பணம்

அப்பன் செத்துப் போனால் வரிப்பணம் - சொந்த

ஆத்தாமாண்டு போனால் வரிப்பணம்

குப்பச்சி சடங்கானால் வரிப்பணம் - தம்பி

குமராண்டி கலியாணம் வரிப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமாதிகாடாத்து இழவுக்கும் - நாமள்
கட்டாயம் கொடுக்கணும் வரிப்பணம்

கரங்கள் தூக்கும் பூசாரிக்கு - ஜோடி
காவிவேட்டிக்குமே வரிப்பணம்

பெட்டக் கோழி அறுக்க வரிப்பணம் - முனியன்
பூசைக்குக் கிடாவெட்ட வரிப்பணம்

வேலைக்குப் போனாலும் வரிப்பணம் - சும்மா
வீட்டிலே இருந்தாலும் வரிப்பணம்

கசப்புக்கும் டோப்புக்கும் வரிப்பணம் - சைடர்
கள் நெடுங்கோட்டுக்கு வரிப்பணம்

அநியாயம் தோட்டத்தில் பொருக்கல்லை - தமிழ்
அடிக்கடி படிச்சின்னும் தெரியல்லை

புனைகதை எழுத்தாளர்களெவரும், வாய்மொழிப் புலவரால் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ள மேலுள்ளவாறான அவலங்களை சிறப்பான முறையில் தமது படைப்புகளிலே வெளிப்படுத்தியிருப்பதாகக் கூறுவதற்கில்லை.

தோட்டத்து தொழிலாளரினது வாழ்க்கை அவலங்கள் குறித்து 'பபூன்' பாடிய வாய்மொழிப் பாடல்களின் சில பகுதிகள் பின்வருமாறமைகின்றன:

பொங்கல் வருது இன்று
பொம்பளைக்கு சேலைவாங்க
கம்பளம் பத்தா துன்னு
சாயங்காலம் மண்ணு வெட்டப்
போ.. றே... ன்
நான் சாயங்காலம்
மண்ணு வெட்டப் போ.. றே... ன்
.......................

மண்ணு வெட்டும் மச்சானுக்கு
மத்தியானம் கஞ்சித் தண்ணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொச்சையில் சோத்தைப் போட்டு
முருங்கக் கீர நல்லாச் சுண்டி -நானே...
மண்ணு வெட்டும் எடத்துக்குப்
போ.... றே... னே...!
....................

அடிச்சுருவான் பெரட்டுத் தப்பு
அவசரமா எழுப்பணும்
ஆறிப் போன பழயக் கஞ்சிய...
அவதியோட குடிக்கணும்......

கவ்வாத்துக்குப் போகணும்
கத்திய நான் தீட்டணும்
கட்டாயமா எனக்குப் - பெரிய
ரொட்டி சுட்டுக் குடுக்கணும்
...............

மடிச்சு கம்பளி போடணும்
எடுத்துக் கூடைய மாட்டணும்
எளப்பு மனுசன் புள்ளைகள
ஏத்திக்கிட்டு நடக்கணும்....

புள்ள காம்பிரா - கெழவிகிட்ட...
பொத்துன்னு போட்டு ஓடணும்
ஏத்தபடி ஏறனும்
எந்த மல துண்டு இன்னு
எட்டி நின்னு வாங்கணும்
..................................

தொழிலாளர்களை போரிடத்தூண்டும் எழுச்சிப் பாடல்களையும் வாய்மொழிப்புலவர் சிலர் இயற்றியுள்ளார். இவ்விதத்தில் சோமு. பெரீ இருளப்பா வழங்கிய பாடல் குறிப்பிடத்தக்கது. அது பின்வருமாறமைந்துள்ளது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தது போதுமே எழுவீர் - இந்த
பூமியில் சொந்த நிலை எனது சொல்வீர் (பொ)

மாடமாளிகை மாடிகள் கட்டி
மாநிலம் புகழ வாழ்கின்றான்
மாயமாய் அவன் ஆவிபோன பின்னே - இந்த
மாடியில் உடலை வைத்திருப்பானா
எல்லாம் அழியும் உயிர்களடா - இதில்
யாருக்கும் சொந்தம் இல்லையடா - கொலை
பாவம் தவிர்த்து வாழ்வாய்யடா

ஈழத்திலே மலைநாடு தமிழனை - இல்லை
இன்னாட்டவன் என்று மறுக்கிறார்
அவன் சிந்தும் ரத்தத்தில் வளரும் தேயிலை
நாடெங்கும் புகழ் விற்குறான்
இங்கே நாடற்றவர் யாரும் இல்லையடா
நயவஞ்சகம் செய்யும் தொல்லையடா
வஞ்சகத்தை எதிர்க்க வருவாயாடா (பொ)

ஆயிரம் காலம் ஆண்டியாய் வாழ்வதில்
அருத்தம் என்ன நீ சொல்வீரே
ஒரு நாளாகிலும் வீரமாய் வாழ்ந்து
புகழாய் மடிவது மேன்மையடா
அறப்போர் செய்ய புறப்பட்டா
அனாதை விலங்கை முறிப்பமடா - இங்கே
உரிமை வாங்கி வாழ்வோமடா - (பொரு)

**தோட்ட நிகழ்வுகள்**

தேயிலைத் தோட்டப்பகுதிகளில் அவ்வப்போது நிகழ்கின்ற சம்பவங்களுள் முக்கியமானதாக முன்னர் அதிகளவு இடம்பெற்றுவந்துள்ள கொலைகள் பற்றிப் பல பாடல்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றை தமிழக ஆய்வாளர்கள் 'கொலைச்சிந்து' என்பர். தமிழ் நாட்டில் இவைபற்றி தனி ஆய்வுகள் இடம் பெறும் அளவிற்கு இவ்வகைப் படைப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம் பெற்றிருக்கின்றன. (உ-ம் 'தமிழகக் கொலைச்சிந்து' டாக்டர் சி.மா. இரவிச்சந்திரன், சுபாஸ்போஸ், கோவை 2001) மலையகத்தில், இவ்வாறான பாடல்களைப் பாடியோருள் ரோசாலையைச் சேரந்த எஸ். ராஜப்பா முக்கியமானவர். பன்னிரெண்டு பேரின் படுகொலைகள் பற்றி இவர் பாடியிருக் கின்றார்.

தமிழ் நாட்டிலெழுந்த கொலைச் சிந்துப் பாடல்களுக்கும் இவற்றிற்குமிடையே இரு முக்கியமான வேறுபாடுகளை அறியமுடிகின்றது. தமிழ்நாட்டில் பாலியற்தொடர்பு குடும்பத்தகராறு, களவு, ஊர்க்கலவரம் முதலியன கொலைகளுக்குக் காரணமாக, இங்கு கட்சித்தகராறுகள் அவற்றிற்கு காரணமாகியுள்ளன. தமிழகக் கொலைச்சிந்துகள் கதைப் பண்புடைய நெடும்பாடலாக அமைய இவை நிகழ்ச்சி விபரிப்பு மட்டும் கொண்ட குறும் பாடல்களாகவுள்ளன. (மேலும் கொலைச்சிந்து என்பது பரந்த பொருளில் தமிழ் நாட்டிலே கையாளப்படுகின்றது. தற்கொலை மரணம், வெள்ளம், புயல், முதலானவற்றின் போது ஏற்படும் மரணம் என்பனவும் கொலைச்சிந்துகளே, இவ்வாறு நோக்கும்போது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இயற்கை அனர்த்தப் பாடல்களும் கொலைச்சிந்துகளே, ஆயினும் மலையகத்தில் அவ்வாறான இயற்கை அனர்த்தப் பாடல்கள் எழுந்திருப்பதாகத் தெரியவில்லை)

மலையகக் கொலைச் சிந்துப் பாடலொன்று இவ்வாறு ஆரம்பிக்கிறது:

அட்டன் ஜில்லா கொட்டியாக்கொல்லை பகுதி
பொகவானை - தொங்கப்பத்தினி தோட்டம்
செண்ணன் பூசாரி படுகொலை

(கனகாலம் பாடுபட்டு என்ற மெட்டு)

பகவானை தோத்தரிக்கும்
பொகவானை எஸ்டேட்டில்
மாறாட்ட மதி கோரும் - நம்பி நம்பி - வீண்
போராட்ட சதி கூறும் - தம்பி தம்பி

தொண்டமான் அஸீஸ்[6] ரெண்டு
பாட்டியிலே மூண்ட சண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்கப் பத்தினி தோட்டத்திலே - ஐயா ஐயா - பெருந்
தொந்தரவில் மாண்டதென்னா - பொய்யா பொய்யா

ஆயிரத்தி தொளாயிரத்தி
ஐம்பத் தொன்பதாம் வருஷம்
ஆங்கில ஜனவரியில் - சொன்னேன் - சொன்னேன் - மிக
அடியும் வெட்டால் மாண்டனரே - செண்ணன் - செண்ணன்

மண்ணுலகை மறந்தாருங்க
விண்ணுலகை சேர்ந்தாருங்க
செண்ணன் தவ பூசாரிங்க - முன்னே - முன்னே - குறி
சொன்ன மொழி மாறாதுங்க - அண்ணே - அண்ணே

பெஞ்சாதி பறதவிக்க
பிள்ளை மூன்றும் தத்தளிக்க
பிறிந்தாவி துறந்திட்டாரே - ஐயோ - ஐயோ - என்று
பெண்டீர் பிள்ளை நின்று புலம்பு - தையோ - ஐயா

தாடி தலை முடி வளர்த்து
தவசி போலே நடிக்கும்மது
குடியன் வெறி மூட தடி - ராமன் - ராமன் - சேர்த்த
குடிகெடுக்கும் மருதாய் யீன்ற் - சேயன் - சேயன்

செண்ணன் ராமன் தகறாரை
எண்ணி உணர்ந் தறியாமல்
செண்ணன் பின்னால் சுப்ரமணியன் - வேலு - வேலு - வந்து
செமந்தடித்து வெட்டிய பின் - கேள - கேளு

மண்டலம் மறந்த செண்ணன்
விண்டலம் போய் சேர்ந்தார் சொன்னேன்
ராமன் வேலு சுப்ரமணியன் - கம்பி - கம்பி - சிறையில்
எண்ணி குண்ணி வதங்குறாங்க - வெம்பி - வெம்பி

எந்த விதமாக கேஸ்
எப்படி முடி வாகுமோ
செந்தமிழ் ராஜப்பா உரை - அண்ணே - அண்ணே - அந்த
சந்தற்பம் எதிர்பார் வரும் - பின்னே - பின்னே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியற் தொடர்பு காரணமான சில கொலைகளும் நடைபெற்றுள்ளன. அவ்வாறு நடைபெற்றதொரு கொலைபற்றிய 'கொலைச்சிந்து பாடல்' பின்வருமாறு ஆரம்பிக்கின்றது:

## விருத்தம்

உலக ஆண்களும் உத்தம கண்களும் நித்தமும் மனதில் உணர வேண்டியது
நீதி மன்றமும் ஒன்றே உண்டென்று நெஞ்சினில் உணரவேனும்
அஞ்சாமல் செய்யும் கொலையை அகற்றியே நடக்க வேண்டும்
ஐம் பொறிகள் வழிசெல்லாமல் அடங்கி கற்போடு இருக்கவேனும்
அரசனையே நம்பி புருசனையும் இழக்க வேண்டாம்
அடுத்தவள் வாழ்க்கையை கெடுக்கவும் நினைக்க வேண்டாம்
கணவனே கண்கண்ட தெய்வமென்று காலமும் தள்ளனும்
இப்படியெல்லாம் நடக்காத மாதோவை கூத்தாயி கழுத்து முண்டம்
எங்கேயோ போச்சி எம் பெருமான் துணையும் ஆச்சி.

## கள்ளக் காதல் கொண்ட கூத்தாயின் படுகொலைச் சிந்து

(கன்னிக் கொலைக்கேசு என்ற மெட்டு)

ஆயிரத்தித்தொளாயிரத்தி அறுபத்து இரண்டிலே
ஆனதொரு எட்டாம் மாதம் அவணிதனில் நடந்த கொலை
இருபத்தொறாம் தேதி
இது நடந்தகொலைச் சேதி

புதன்கிழமை காலையிலே பொல்லாத கூத்தாயி
கணவன் வீட்டுக் குடத்தையுமே கையிலேயே தூக்கிக்கிட்டா
கண்ட கணவன் பெருசு
கையில் எடுத்தாள் குடம் வெரசு

ஆசைக்கி தாளி கட்டி அருமையாக வைத்திருந்தான்
அஞ்சாறு பிள்ளை பெத்தும் அறிவிழந்த கூத்தாயிங்க
படு கொலையாச்சி கூத்தாயி
உயிரும் அத்தாச்சி

கொண்டவனைத் துரோகம் செய்து கண்டபடி நடந்தவளே
கொண்டுவந்த குடத்தைத் தாவேன் என்றுமேதான் கேட்கையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டபடி பேச்சி
அவள் கழுத்து முண்டம் அத்தாச்சி

அடுத்த வீட்டை நம்பிக்கிட்டு ஆட்டம் போட்ட கூத்தாயி
காத்திருந்த கணவனுமே கடுங்கோபம் கொண்டதனால்
கழுத்து முண்டம் எங்கே
தாளி கட்டினவன் கையிலே தானுங்க

## தொழிற்சங்கப் பிரச்சாரம்

மலையகத்தில் அரசியல் காட்சிகள் சார்ந்தும், கட்சிகள் சாரமாலும் உருவாகியுள்ள தொழிற்சங்கங்களும் மலையகச் சமூகத்தில் அவற்றின் மேலாதிக்கமும் விதந்துரைக்கப்பட வேண்டியவை. இவை பற்றி பொ.முத்துலிங்கம் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியது. "ஐம்பதுகளில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களின் கீழ் ஸ்தாபனப்பட்டிருந்தனர். மறுபுறம் இக்காலகட்டத்தில் தொழிற்சங்கங்களில் பணியாற்றிய ஊழியர்களும் தொழிலாளர் தலைவர்களும் தம் தொழிற்சங்கங்களுக்கு ஆட்சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுகையில் வாய்மொழிப் பாடல்களையே பிரதான ஆயுதமாகக் கடைப்பிடித்தனர்." ஈழத்தின் ஏனைய தமிழ் பிரதேசங்களில் இத்தகைய சூழல் நிலவவில்லை என்பதையும் அப்பிரதேசங்களின் வாய்மொழிப் புலவர்கள் இப்பின்னணியில் பாடல்கள் பாடியிருக்கவில்லை என்பதையும் இவ்வேளை மனங் கொள்வதவசியமாகிறது. பொ. முத்துலிங்கம் அண்மையில் தொகுத்து வெளியிட்ட 'மலையக முச்சந்தி இலக்கியத் தொகுப்பு ஆகிய பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள்' (2012) தொகுப்பு நூலிலுள்ள வாய்மொழிப் புலவர்கள் பன்னிருவருள் பெரும்பாலானோர் தொழிற் சங்கப் பின்புலத்திலே உருவானவர்களாகவே அறியமுடிகின்றது.

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க முக்கிய உறுப்பினராக எம்.ஏ. இராகவன், தமது சங்கம் தொடர்பாக வெளிப்படையான பிரச்சார நோக்கில் எழுதிய பாடலொன்று கீழே இடம் பெறுகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் தேசிய சங்கக் கொடியை ஏந்துவோம்
செழிப்பான வாழ்வு தனைக்காண சேர்ந்து செல்லுவோம்
உழைப்பாளரே ஒன்று சேருவீர்

கரை காண கொடியின் கீழே ஒன்று சேருவோம்
கனமேனும் அயராதுழைத்து உரிமை கோருவோம்
கலங்காமலே சேவை செய்குவோம்
(தொழிலாளர்)

வெண்மைக் காட்டிடும் தூய்மையை
பச்சைக் காட்டிடும் செழுமையை
சிவப்பு சூரியன் காட்டிடும் தியாகம் உழைப்பு இரண்டையும்
வர்ண மூன்றைக் கொண்டதாய்
வளங்கள் பொங்க நேர்த்தியாய்
வானலாவப் பறந்திடும் வறுமைத் தீர நாளுமே
(கரை - தொழிலாளர்)

**பிரஜா உரிமைப்பிரச்சினை**

மலையக மக்களது மிக முக்கியமான சமூகப் பிரச்சினைகளுள் பிரஜா உரிமைப் பிரச்சினையுமொன்றாகும். இப் பிரச்சினையானது 1964ல் கைச் சாத்திடப்பட்ட சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னர் 'மலையகத்தவரொருவர் இந்தியரா? இலங்கையரா?' என்ற கேள்வி எழுப்பக்கூடிய விதத்தில் புதிய பரிமாணம் எடுத்திருந்தது. இவ்விருவேறு காலப்பகுதிகளிலும் இப் பிரச்சினைபற்றிய மன உணர்வுகள் மனப்போராட்டங்களை வெளிப்படுத்தும் பல வாய்மொழிப் பாடல்கள் பிறந்துள்ளன. கா.சி. ரெங்கநாதன் எழுதிய பின்வரும் பாடல், சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியை அடியொற்றி எழுந்துள்ளது:

நீங்கள் இந்தியாவா? இலங்கையா?

(ஓ ரசிக்கும் சீமானே வா. என்ற திரை இசை)

நீங்க - இந்தியாவா லங்கையா எந்தவூர் பிரஜையா
எங்கிருந்து வாழப்போறீங்க - என்று
வந்திருக்கும் வாக்குரிமை மனுவை நிரப்புதற்கு
மறந்து விடாதீங்க நீங்க - இந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்க - எந்தவூர் பதிவு கொடுத்திடினம் - அதுயிந்த
ரெண்டு வருடத்தில் முடிந்திடணும் - இதைப்
பிந்த விட்டுப் போட்டு சும்மா முந்திஏமாந் திட்டதுபோல்
மிதமா யிருந்திடாதீங்க - உங்க
சந்ததிக்கு என்ற ஒரு சொந்த இடத்தைப் பிடிக்க
சங்கத்துடன் ஒத்துழையுங்க... சங்க... நீங்க - இந்தி

சட்டம் - அஞ்சேயகா லட்சம்பேர் அங்கிட்டு - மற்ற
மிஞ்சு மூன்று லட்சம்பேர் இங்கிட்டு - இது
அங்கு சென்றாலுமல்ல திங்கு நின்றாலுமிதில்
அச்சமென்ப தொன்று மில்லைங்க என்றாலுமது
அத்துமீறி நடக்கும் சுத்தப்போக்கி ரித்தனத்தை
கர்த்தன் செயல் என்று வையுங்கோ - எக்காலத்திலும்
ஒற்றுமை அவசியமுங்க நீங்க - இந்தியா

இந்தியா - போங்க என்று சொல்லுதொரு கூட்டம் - ஏன்
போகணும் என்குது மறு கூட்டம் - இதில்
போவென்று சொல்பவரும் போகவேண்டா மென்பவரும்
பாட்டாளித் தலைவர் தாங்க - இவுங்க
பாட்டாளிக்குக் கூட்டாளியாய்
பக்கப்பலமாயிருந்தால்
பட்டபலன் கிட்டப் பாருங்க - ரெங்கநாதன்
பைந்தமிழ்ப் பாட்டுக் கேளுங்க நீங்க - இந்தி

மேற்குறிப்பிட்ட 'இருதலைக் கொள்ளி'யான சூழலில் பிரிவுத்துயர் குறித்தெழுந்த வாய்மொழிப்பாடல்கள் பலவுள்ளன கா.சி.ரெங்கநாதன் தொடக்கம் கபாலி செல்லன்வரை இத்தகு பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளனர்

## மலையக வரலாறு

சமூக உணர்வினாலும் தொழிற்சங்கப் பின்புலத்திலும் இவ்வாய்மொழிப் புலவர்கள் தமது முற்பட்டவரலாற்றினை நெடும்பாடல்களூடாகவும் குறுகிய பாடல்களூடாகவும் அவ்வப்போது வெளிப்படுத்தி வந்துள்ளனர். தூரத்துப் பச்சை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலான நாவல்களிலும் ஒரு சில சிறுகதைகளிலும் மலையக மக்கள் வரலாறு ஓரளவே பதிவு பெற்றுள்ள நிலையில் அவற்றிலிருந்து வேறுபட்டு இவ் வாய்மொழிப் பாடல்களில் உணர்ச்சி பூர்வமான முறையில் அவைவெளிப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நெடும்பாடல் என்ற விதத்திலே S. பெரியக்காள் எழுதியுள்ள 'தமிழாதி அனுதாபக்கும்மி' முக்கியமானதாகின்றது. அதன் ஒரு பகுதி இங்கு இடம்பெறுகின்றது:

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி நீங்கள் குனிந்து
கும்மியை கொட்டுங்கடி உலகம் செழுத்திட ஏழைகள் வாழ்ந்திட
ஒற்றுமை யாகவே கொட்டுங்கடி
ஆதி முதலொரு காலக்கிலே துரைமார் அட்வான்ஸ் தந்து
ஆளுங்கட்டி வேலை செய்ய இந்தே கூட்டி வந்ததொரு
விபரம் சொல்லுகிறேன் கேளுங்கடி

கங்காணி கங்காணிஎன்று சொல்லி சிலர் கறுப்புச் சட்டையும்
தோளில் போட்டு இந்தியா தேசத்தில் வந்து ஆள் கொண்டு வந்து
ஏச்சதை சொல்லுகிறேன் கேளுங்கடி
ரோட்டோடப் போய் ரோட்டோட வந்தால் ரோசமாய்
செக்ரோலில் பேர் விழும் காலை நீட்டி உறங்கிவிட்டால்
அங்கே தன்னாலே செக்ரோலில் பேர் விழும்
வாழைப்பத்திலே வீடு மெலுகலாம் வாசலிலே வெற்றிலைப் பாக்கு
மரம் தேயிலைத் தூர்களைத் தோண்டி எடுத்துமே
தேங்காயும் மாசியும் சாப்பிடலாம்

வேலையுமிலை வெட்டியுமில்லை விளையாடி சம்பளம்
வாங்கிடலாம் வாவென்று அழைத்திட ஒப்பந்தம்
வாங்காமல் வந்ததும் குற்றமாய் தோன்றுகையா

தட்டப்பாரை என்னும் கோபுக்குள்ளே நாங்கள் பட்டப்பாட்டை
கொஞ்சம் கேளுங்களே சட்டிபானைதனை வாங்கிக்கொண்டு
சாதம் சமைத்து சாப்பிட்டு வந்தோமையா
முப்பது நாளிகை கப்பலிலே எண்ணை முடித்திறக்காமல்
சத்திப்பண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிப் பிழைத்திங்கே வந்ததுவும் கந்தசுவாமி தயவாலே கேசர்களே
தோட்டத்திற்கு வந்து சேர்ந்து விட்டோர் வெள்ளை துரைமார் சொற்படி
கேட்டு விட்டோம் பெருங் காட்டையும் வெட்டி
பயிர்தொழில் சொன்னதோர் கங்காணி செய்த தப்பிதம் சொல்கிறேன்
சேயர்களே

எப்படிக் காசைப் பறிப்பதென்று
எடுத்தான் யோசனை நண்பர்களே
கம்பிளியும் இரண்டு ரூபாயாம் கருப்பு கம்பிளியும் இரண்டு
ரூபாயாம்

நாலு ரூபாய் முடிச்செடுத்தான் அதை நாமொன்றும்
சொல்லாமல் தந்து விட்டோம்.
சொந்தமான ஊரை விட்டு விட்டோம் நாம் சுதேசி என்ற
பெயர் பெற்று விட்டோம் கம்பிளி வாங்கி தலையிலே போட்டு
நாம் கஷ்டப் பட்டோமே தோழர்களே

**அரசியல் விமர்சனம்**

இவ்வாய் மொழிமரபின் சமகால வாரிசாக விளங்கி அண்மையில் மரணித்த கபாலிசெல்வனது பாடல்கள் சமகால அரசியலை கடுமையாக விமர்ச்சிப்பனவாகவுள்ளன.

மாரி மாரி வரும் அரசாங்கமே - தினம்
மக்கள் வயிற்றலடிப்பது பெரும்பாவமே

ஆட்சி முடியயிலே அழகா பேசுறீங்க
ஆட்சிக்கு வந்துவிட்டால்
அடிவயித்தில அடிக்கிறீங்க - நீங்க

சாயிரப் பக்கம் சாயிரவனெல்லாம்
பொழைச்சிக்கிறான் - எந்த
நாளும் உழைச்சி கொடுக்கிறவன்
திண்டாடுறான்.

பூமாலை போடவனெல்லாம்
பொரணி பேசுறான். கைய தட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டவனெல்லாம் கசந்து போயிட்டான்
மேடையிலே பேசுவது ஒன்னு - பிறகு
சட்டம் போட்டு தீட்டுவது ஒன்னு
நீதி நேர்மை யெல்லாம்
எங்கே வச்சீங்க
நிம்மதியா எங்களை நீங்க
வாழவிடுங்க

அஞ்சு வருசம் கழிஞ்ச பின்பு ஓட்டுக்கு
நீங்க வாறீங்களே எங்களது வீட்டுக்கு
ஓட்டு பிச்சை கேட்டு எங்களை கும்பிட்டு
வெண்டுக் கிட்டு போறீங்களோ
பார்லிமென்டு உள்ளுக்கு.

**பக்தி உணர்ச்சி**

பக்தி உணர்ச்சிப் பாடல்கள் மலையகத்திலும் எழுந்துள்ளன. இவ்விதத்தில் ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை திருப்புகழ்ப் பாடல் மெட்டிலே பாடிய பின்வரும் பாடல் சிறப்புமிக்கது:

ஸ்ரீ கோணேஸ்வரம்

| | |
|---|---|
| தனனா தனந்த | தனனா தனத்த |
| தனனா தனத்த | தனதான |
| அகமே குலுக்கி | முகமே மினுக்கி |
| அழகே பெருக்கி | விழியாலே |
| அறிவே கலக்கி | அணலாயுருக்கி |
| அறமே விலக்கி | மயலூட்டும் |
| அணி ஆபரணம் | மணி பொற்சதங்கை |
| அவள் பாத தண்டை | கொலுசாட |
| அவர்பால் இழுக்கும் | மடமாதர்கொங்கை |
| அணுவாலிழைத்த | அடியேனை |
| அறிவே துலக்கி | அருள்பாத பத்ம |
| அடியேன் நினைக்க | அதனாலென் |
| அதிபாவம்யாவும் | ததியே தொலைக்கும் |
| அறுமுகத்தோ | டழகான |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மயிலேறும்செந்தன் | மலைமாது மைந்தன் |
| மறைநாதன் கந்தன் | அருள்மேவி |
| மணியே கொழிக்கும் | கடல்சூழும் கோண |
| மலைமீதமர்ந்த | பெருமாளே |

## (iii) ஏனைய பிரதேசங்கள்

### யாழ்ப்பாணப் பிரதேசம்

இவ்வகையான வாய்மொழிப் பாடல்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் முற்காலங்களில் செல்வாக்குப் பெற்றிருந் திருப்பினும் அவற்றை இன்று பெறுவது மிகமிக அரிதாகவேயுள்ளது. கிடைக்கின்ற பாடல்கள்கூட பாடியவர் பெயர் அறியப்படாதனவாகவே காணப்படுகின்றன. இவ்வாறான மரபு பற்றிய தேடல் ஏனைய மாவட்டங்கள் போன்று இங்கும் அண்மையிலேயே ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா இவ்வாறான பாடல் மரபு பற்றி ஆற்றிய நினைவுப் பேருரை (யாழ்ப்பாணத்தில் அரைவாய் மொழிப் பாடல்கள் - வேலாயுதம் மகா வித்தியாலய நிறுவுனர் தின நினைவுப் பேருரை 2010) மட்டுமே முதன் முயற்சியாகவுள்ளது; முக்கியமான சில தகவல்களைத் தருகின்றது. தமது தேடல்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண பிரதேச வாய்மொழிப் பாடல் சார்ந்த பாடு பொருள்களை அவர் பின்வருமாறு வகுத்துள்ளார்: 1. ஊர் நிகழ்வுகள் 2. சமூகச் சீர்திருத்தம் 3. சமூகக் குறைபாடுகள் 4. பிரதேச வரலாறு 5. பக்தி 6. வசைபாடுதல்

### ஊர் நிகழ்வுகள்

கொலைகள்

ஏறத்தாழ கடந்த நூற்றாண்டின் இருபதுகளிலே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சண்டியனான சேனாதிராஜா கொலை வழக்கு இவ்விதத்தில் முக்கியமானதொன்று. இக் கொலை பற்றி திருநெல்வேலி M.R. வித்தியாவல்லி அம்மாள் 'ஸ்ரீமான் சேனாதிராசா கொலை விசித்திரக் கவிகள் முதலாம் பாகம் என்றொரு பிரசுரத்தை வெளியிட்டுள்ளார். அன்னாரது நூல் வெளிவருவதற்கு முன்னர் அக் கொலை பற்றி வேறு சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் வெளிவந்திருப்பது பற்றி அந் நூலின் முன்னட்டைக் குறிப்புத் தெரிவிக்கின்றது. அவ்வாறு வழங்கி வந்துள்ள பாடலொன்றின் ஈரடிகள் பற்றி "பண்டாரக் குளத்தடி முத்தன் கொண்டானே சேனாதிராசாவை" என்றவாறு பேராசிரியர் சிவலிங்கராசா நினைவுகூர்கின்றார். M.R. வித்தியா வல்லி பாடிய நூலின் அவையடக்கம் பின் வருமாறு அமைகின்றது.

'கண்மணியாகிய சேனாதிராசன் கதைகளையோர் பெண்மணியாகிய பேதை கவிவழி பேசியதால்

பண்ணிசை குற்றம் பார்த்துப் படித்திடும் பாவலர்கள்
விண்மணியம் என விரும்பியுரைத்து விளம்புவரே'

சேனாதிராசாவை பின்வருமாறு அறிமுகம் செய்கின்றார் புலவர்:

சற்சனரே சொல்லக் கேளும் – இந்த
தரணியெல்லாம் புகழும் கோவை நகரில்
சிற்பரன நாளினாலே – சகல
செல்வமும் படைத்திலங்கும் குலத்தில் (சற்சனரே..)

குன்றனைய குணம் படைத்தோன் – குமார
சூரிய குலத்துதித்த குழந்தை யென்பர்
வன்றிறல் சேனாதிராசா – என்று
வையகத்தார் சொல்லுவார்கள் ஐயா நேசகர்கள்

மேற்கூறிய பாடல் 'செந்நெல் செறி நல்லை நகர் வாசன்' என்ற மெட்டிலமைய, 'பச்சைமலை, பவள மலை' என்ற மெட்டிலமைகின்றது, பின்வரும் பாடல்:

சாய வேட்டி யொன்றெடுத்து தானரையில் மாட்டி
தம்பி, தானரையில் மாட்டி
தன் கையாற் சால்வைதனை தலையினிலே சூட்டி
வாயினிலே தாம்பூலத்தை வாங்கியவர் போட்டார்

சென்ற நூற்றாண்டின் அறுபதுகளிலே யாழ்ப்பாணத்திலே பரபரப்பாகப் பேசப்பட்டது கோகிலாம்பாள் கொலைவழக்கு. (இது தொடர்பான பாடல்களைப் பாடிய, 'வைரமுத்து நகைமாளிகை' என்று தனது ஆடையில் பெயர் பொறித்திருந்த, ஒருவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சிறுபராயத்தில் யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் நான் கண்டுள்ளேன்). இது தொடர்பான புத்தகங்களைக் கையிலே கொண்டு பாடித் திரிந்து விற்பனை செய்த ஒருவரைத் தான் கண்டிருப்பதாக பேராசிரியர் சிவலிங்கராஜாவும் நினைவு கூர்வதோடு, தமது நினைவிலெஞ்சிய பின்வரும் பாடல் அடிகளையும் தருகின்றார்:

"உருத்திரபுரம் கேசு
உறுதியான கேசு
அழுத்தமாகப் பேப்பர்களைத்
திருத்தமாக நானும் பார்த்துப்
பொருத்தமாகப் பாடிவந்தேன் தெரியுமா? இது
உருத்திரபுரம் கேசுதானே புரியுமா?

வவுனியா மாவட்டத்திலேயும் கோகிலாம்பாள் கொலை வழக்குப் பாடல்கள் பாடப்பட்டிருப்பதை தமது இளமைப் பருவத்தில் கேட்டிருப்பதாகக் குறிப்பிடுகின்ற கலாநிதி அகளங்கன் அது தொடர்பில் பின்வரும் அடிகளை நினைவு கூர்ந்துள்ளார்.

"குப்புசாமி கூண்டிலேறி
எடுத்துச் சொன்ன வாக்கியத்தை
அப்புசாமி என்று சொன்ன நீதிபதி...."

இக் கெலை வழக்குத் தொடர்பான சுவாரஸ்யமான தொரு விடயமுள்ளது. அதாவது, (கோகிலாம்பாள்) கொலைவழக்குடன் தொடர்புபட்ட கோகிலாம்பாளுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டதாக அறியப்பட்ட சூழலில் அவரைச் சிறைச் சாலையில் சந்தித்தமை பற்றி தமது நூலொன்றிலே புஷ்பராணி நினைவு கூர்ந்துள்ளார் (அகாலம், வெளியீடு: கருப்புப்பிரதிகள் 2012) 'கோகிலாம்பாள் கொலைசிந்து' வின் ஆரம்ப பாடலாக முற்குறித்த உருத்திரபுரம்கேசு" இருப்பதாக எழுதுகின்றார்.

முற்கூறியவாறான கொலை வழக்குப் பாடல்களை அன்றைய கால, கூத்து, நாடக மேடைகளிலே ஹார்மோனிய வித்துவான் அல்லது பபூன் இடைப்பிறவரலாகப் பாடுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு யாழ்ப்பாணத்தில் நிலவி வந்ததாகவும், கீரிமலையிலே நடைபெற்ற முக்கொலை பற்றிய அவ்வாறான பாடலொன்றினை மேடையிலே தாம் கேட்டதாகவும் பேராசிரியர் சிவலிங்கராஜா நினைவு கூர்கின்றார்.

'முக் கொலையே இது முழுக் கொலையே
இக் கொலை நடந்ததெங்கள் பக்கவூரிலே - அதைக்
கேட்க வேர்க்குமே - கண்
பார்க்க கூசுமே:

தொற்று நோய்கள் அவ்வப்போது ஊரிலே பரவி வந்துள்ளன. பலரைப் பலியெடுக்கின்ற தொற்று நோய்களைப் பற்றிய வாய் மொழிப் பாடல்களும் எழுந்துள்ளன. இவ் விதத்தில் "கோதாரிக் கழிச்சல் கும்மி" ஒன்று எழுந்ததாக அறியப்படு கின்றது.

அடிக்கடி ஏற்படும் 'சிரங்கு' பற்றிய வாய்மொழிப் பாடலின் ஒரு பகுதி பின்வருமாறு அமைகின்றது.

"சிரங்கப்பனாரே - குஷ்ட
ராஜன் பெற்ற செல்வக் குபேரா
அகங்கைக்கும் புறங்கைக்கும்
அழகான முழங்கைக்கும்
சொறியச் சொறிய - நல்ல
சுகத்தைத் தந்தாயே - சிரங்கப்பனாரே"

மலேரியா, சின்னமுத்து, கொப்புளிப்பான் முதலிய நோய்கள் பற்றியும் இவ்வகை வாய் மொழிப் பாடல்கள் எழுந்திருப்பதாக அறிய முடிகின்றது.

**சமூகச் சார்பு**

மது பாவனை

மதுபாவனை பற்றியும் அதனை ஒழிப்பது பற்றியுமான வாய் மொழிப் பாடல்களின் வரவு இவ் விதத்தில் முதன்மையானது. இவ்வாறான பாடலொன்றின் ஒரு பகுதி (பேராசிரியர் சிவலிங்கராஜாவின் தகவல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சோக்கான தென்னங்கள்ளு
சொக்க வைக்கும் எந்தன் கள்ளு
சோதித்துக் குடிச்சு பார்க்க
வாருங்கோ நயினார் - உங்களைச்
சூறையாடிட்டி விழுத்தா விட்டால்
கேளுங்கோ நயினார்

கள்ளைக் கடவுளாகக் கருதி 'கள்ளுக் கடவுள்' என்ற பெயரிலே பாடப்பட்ட பஞ்சபுராணம் பற்றிய சுவையான விடயத்தை முதியவரொருவரது தகவலாக்கித்தந்திருக்கின்றார் பேராசிரியர்.

## தேவாரம்

பாடுதற்கும் வகையறியேன் பாளை வேந்தா
பாவிகளை மகிழ்விக்கும் பாளை வேந்தா
நீடுலகில் எம் போன்ற ஏழைகட்கு
நீயின்றி யாருதவி சொல்லுமையா

## புராணம்

சண்டையில் பிறப்பாய் போற்றி
சல்லியைப் பறிப்பாய் போற்றி

பண்டைய முதல்வா போற்றி
பாளையிற் பிறப்பாய் போற்றி
மண்டையை உடைப்பாய் போற்றி
மாதரைக் கெடுப்பாய் போற்றி

கண்டவர் சிரட்டை ஏந்தும்
கடவுளே போற்றி போற்றி

ஆங்கிலரது ஆட்சியாலே ஏற்பட்ட சமூக மாற்றங்களை - நவீன நாகரீகம், பண்பாடு முதலியன - கண்டிக்கின்ற வாய் மொழிப் பாடல்களுமுள்ளன. கோதுமை மா பாவனை பற்றிக் கிண்டல் செய்கின்றது, பின்வரும் பாடல்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வந்தம் மாவும் வழுவி - எங்கே
சொந்தம் மாவும் நழுவி
மந்தமாகத் தழுவி - கோ
விந்தமாகப் பழகி - கோ
தம்ப மாவும் வந்திருக்கிறா - அவவும்
நிந்த மல்லச் சொந்தம்மாவைப் பார்!"

அக்கால பெண்களது நடையுடை பாவனைகளைக் கிண்டல் செய்கின்றது, பின்வரும் பாடல் :

"தாவணி பாவாடை எறிந்தார் - இப்போ
சல்லடையாம் சில்க்சைசில் நல்லுடை செய்வார்
பூ மணவார் பௌடர் மணப்பார் - இவர்
புடைவைகட்டும் வேடிக்கையைப் புகலுவேன் கேளும்"

இளைஞர்களது போக்குகளைக் கிண்டல் செய்கின்றன பின்வரும் பாடல்கள் :

அஞ்சு வயசுடைய அகிழானள வாம்பிளையள்
பிஞ்சில் பழுக்கிறார் ஐயா - அவர்
வந்து மதவடியில் குந்தியிருந்து கொண்டு
கலியாணமும் வேணுமாம்

மேலுதட்டில் ரண்டு ஈ ஒட்டினாற் போல
மீசை விடுகிறார்கள் - அவர்
காலுக்கு மேலே கால் போட்டுக் கொண்டு
கதைக்கிறாராம் இங்கிலீசு"

பக்தி, வசைபாடுதல் என வகைப்படுத்தியிருப்பினும் அவை எவைபற்றியும் தமது ஆய்விலே பேராசிரியர் சிவலிங்கராசா குறிப்பிடவில்லை. பிரதேச வரலாறு உருவாக்கம் தொடர்பான அவரது உதாரணங்கள் கருத்தியல் சிக்கல்கள் காரணமாக இங்கு எடுத்தாளப்படவில்லை!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலன்னறுவைப் பிரதேசம்

இப்பிரதேசத்தில் வாய் மொழிப் பாடல் மரபு சார்ந்த தேடல் அருந்தலாகவே நடைபெற்றுள்ளது. பின்வரும் இரு விடயங்கள் சார்ந்த பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. (i) இயற்கை அனர்த்தம் (ii) ஊர் நிகழ்வு

## இயற்கை அனர்த்தம்:

தம்பாலை வாசியான மொகமது லெவ்வை புலவர் பாடிய சூறாவளி (1978) காவியத்தின் முக்கியமானதொரு பகுதி பின்வருவது :

கவலையடைந்துள்ள மக்களை - கண்ணால்
காணவே நெஞ்சம் கலங்குதே
மண்டையைப் பிளந்தவர் எத்தனை - இங்கு
மாண்டு மடிந்தவர் எத்தனை
கண்ட துண்ட மானவரெத்தனை - பலர்
கைகளால் இழந்தவ ரெத்தனை - இன
தந்தை இழந்தவ ரெத்தனை
சேயை இழந்தவ ரெத்தனை
செத்து மடிந்தவ எத்தனை
விதவைகள் ஆனவர் எத்தனை - இது
வில்ல முடியாத துயரமே

## ஊர் நிகழ்வுகள்

முதலை பிடித்தல்

வேறு பிரதேசங்களில் கிடைக்காத 'முதலைக் காவியம்' என்பதொன்று இங்கு கிடைத்துள்ளது. சுங்காவில் ஊரில் வாழ்கின்ற இஸ்மாயில் (மூத்த தம்பி) என்பவரால் பாடப்பட்டுள்ளது. பின்வருமாறு ஆரம்பிக்கப்படுகின்றது

இலங்கு நகர் சுங்காவில் ஊரில்
செல்வம் புகழ்கின்ற மாவலி கங்கை
பாதாள மேழையது விடுத்த செய்தி ஒன்றே
பாடல்கள் செய்ய அருள் வல்ல பெரியோ
பெரியமா ஆயிரத்து தொள்ளாயிரத்தோடு
வேறான எழுபத்து ஏழாவது கண்டீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனதொரு ஆடி மாதம் வண்ண மயிலாளே
வண்ண மயிலாளேயது மாதரசுமே கேளுமே
வளர்கின்ற இடமது மூங்கிலடி வெட்டை
மாண்டு மடிந்தாரே வண்ண மகனாரும்....::

## புத்தளப் பிரதேசம்

புத்தளப் பிரதேசத்திற்குரிய இவ்வகை வாய் மொழிப் பாடல் மரபுகள் பற்றியும் அரிதாகவே அறிய முடிகின்றது. இப் பிரதேச வழிநடைச் சிந்துப்பாடல்கள் பற்றி பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் எழுதியிருக்கின்றார். (முஸ்லீம் நாட்டாரியல்; தேடலும் தேவையும் அடையாளம், 2008) 'முஸ்லீம் புலவர்கள் இஸ்லாமிய மக்களின் வாழ்வியலையும் அவர்தம் காலத்து பக்தி நடவடிக்கைகளையும் பொழுது போக்குகளையும் தாம் வாழும் பிரதேசத்தின் இயற்கை அழகுகளையும் கூற இப்பாடல் வடிவத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தியுள்ளனர் என்பது அவரது கூற்று. இவ்விதத்தில் வரகவி செய்கு சுலாவுதீன், ஷெய்கு இஸ்மாயில் ஆகியோர் முக்கியமானவர்கள்.

## திருகோணமலை பிரதேசம்

இப் பிரதேசம் தொடர்பான இவ்வகை ஆய்வுகளும் ஆரம்பநிலையிலே காணப்படுகின்றன. அரிதாகக் கிடைத்தனவுற்றுள், இங்குள்ள புலவர்கள் இப் பிரதேசப் பண்பாட்டு மரபுகளை பேணுவதற்கு முயன்றிருப்பது பற்றித் தெரியவருகின்றது. இவ்விதத்திலே புலவர் சாலையர் பாடிய கங்கைக் காவியத்தின் ஒருபகுதி பற்றிக் கவனிப்பது பொருத்தமானதாகின்றது. இதுதான்:

### கங்கைக் காவியம்

சீராறு மகாவலி கங்கையின் வியப்பும்
தெத்திகள் அமைந்திடும் விஸ்தார விதமும்
நேரான காவியம் நாவால் இசைக்க
நித்தனே என்னாவில் வெற்றி தருவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தகரி ஒத்த முஸ்லீம்கள் திடவான்கள்
மாடாடு கோழி பல காய்கறிகள் சம்பா
உத்தம குணத்தோடு விருந்தாடல் செய்திடும்
உயர் பெருகும் வம்மியடி மணல் மேடுதானே!

தானவன் கிருபையுறு மானே நீ கேளாய்
சாந்தமுறு வெண்ணாவல் சேர்ந்திடும் தெத்தி
தேன் ஒழுகு சோலை செறி புளியடித் தெத்தி
தேவியே செம்பியடி செம்பிலடி பாராய்
பாரோர் புகழ்ந்திடும் பதுமினிப் பெண்ணே
பண்பான ஆத்தியடி நண்பான தெத்தி
காரனைய சூழலியே மடம் என்று சொல்லிடும்
காரணத் தெத்தி இது கண்டு கொள்வாயே!

வாய்த்திடும் களபமுலை மாதரசே கேளாய்
மாபெரிய முதலையுறு நீலியா தெத்தி
பூந்துணர்கள் செறியும் பராந்தடித் தெத்தி
பூவையை பொன்னாங்கனி ஆவலோடு காண்பாய்

காண்பவர்க்கினிமையுறு கன்னியே நடுவில்
கதி மிகுதிக் காராளர் பதவிபெற நாடி
மாண்பினோடு தேரோட மீதேறியாத்திரை
வந்திடும் தீர்த்தம் இது சந்த்ரமுகமாதே!

மாதே ஒலிந்திடும் ஒய்யானை மீதில்
வரி யளி குழைந்தாட நறையருவி பாயும்
கோதகல ரசக்கனிகள் மந்திகள் பறித்து
கொம்பை விளையாடுவது செம்மை பா ரன்பே.

மேதிக் கடாக்களை வதனமார் கவர் கொண்டு
வேட்டையாடி வரு திறமை காட்டியதினாலே
ஆதியில் அமர்ந்த பேர் தீர்த்தம் என்பார்கள்
ஆரமுலை மாதே அமர்ந்து போகுவோமே!

மேலான முப்பழம் பலகார சிற்றூண்டி
மிக்க பேர் உண்டி பழ வர்க்க மருந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலா மறைக்குரிய ஆதி அருளே
தங்கி மறுநாள் ஏகலாம் இனிய முலையாளே!

தாட்குறிய வாற்சிறிய நாப் பெரிய சூகரம்
தங்கி நடமாடிடும் துங்கமுற தெத்தி
மாட்பெரிய வவுணாவில் தாண்டியே யங்கு
மகிமை செறி துரை மக்கள் வங்களா இதுவே!

வங்களாம் வெம்பை கொல்லன் கொச்சி இங்கிலாந்து
பன்னரிய சீமையு நுமன்னவர்கள் அறிய
சங்கை நெறி கொண்டமாந் தோட்டமென்பார்கள்
தான் கண்டு போகலாம் மாங்குயிலே வாராய்

**வன்னிப் பிரதேசம்**

வன்னிப்பிரதேசம் சார்ந்த இவ்வகையான வாய்மொழிப் பாடல் மரபு பற்றியும் மிகக்குறைவாகவே அறியப்பட்டுள்ளது. முல்லைத்தீவு தண்ணீரூற்று பகுதியில் மிஸ்ரீன் (1886-?) என்ற புலவரொருவர் இருந்துள்ளார், 'கலியுகம்' 'காலக்குழப்படி', 'சூறாவளிக்கொத்து', 'நீராவிப்பிட்டி நீரூற்று' முதலான பாடல்களைப் பாடியுள்ளார். இவை எவையுமே இன்று கிடைக்காத நிலையில் நீராவிப்பிட்டி நீரூற்றுபற்றிய பாடலின் சில அடிகள் மட்டும் பின்வருகின்றது (குறிப்பிட்ட நீரூற்று வற்றிய பயிர்கள் வாடிய சந்தர்ப்பத்தில் இது பாடப்பட்டதாம்):

"இயற்கையின் வரனே
இமயத்தின் ஊற்றே
நீராவி நீர்வற்றிப் பொருக்கெழ
நேர்ந்த பயிர்முகம் சாகுதம்மா!"

**மன்னார்ப் பிரதேசம்**

இம் பிரதேசத்திற்குரிய இவ் வாய்மொழிப் பாடல் மரபிலும் வழி நடைச் சிந்துகளே இனங்காணப்பட்டுள்ளன. முருங்கனிலிருந்து உயிலங்குளத்திலுள்ள திரு அந்தோனியார் ஆலயம் செல்வது தொடர்பான வழிநடைச் சிந்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் தொகுத்துள்ள மன்னார் மாவட்ட நாட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் தொகுப்பிலே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பெயர் மறந்துவிட்ட புலவரொருவர் பாடிய அப்பாடல் திரு அந்தேனியார் ஆலயத்திற்குச் செல்வது பற்றியதாகும்.

வழிநடைச் சிந்துகள் அழியாதிருப்பதற்குக் காரணம் அவற்றின் நடைமுறைப் பயன்பாடாதல் கூடும். இன்னொரு விதமாகக் கூறின், வழிபடு தலங்களுக்கான பயணங்கள் இன்றும் இடம்பெறுவது காரணமாகவும் இது பேணப்படல்கூடும். இஸ்லாமியருக்குரிய வழிநடைச் சிந்துப் பாடல்கள் கோலாட்டங்களின் போது பாடப்பட்டுவருவதும் அப் பாடல்களின் நிலைபேறிற்குக் காரணமாகின்றன என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் : மூன்று
# வரலாற்று முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை விவரித்துள்ள பாடுபொருள் அடிப்படையிலே இவ்வகையான வாய்மொழிப்பாடல் மரபு பற்றி ஆழ்ந்து அவதானிக்கின்ற போது இம்மரபு சார்ந்த புலவர்கள் பாடாத விடயங்கள் என்று எதுவுமில்லை என்று கூறுமளவிற்கு எல்லாம் பொருள் பற்றியும் பாடியிருக்கின்றனர்.

அதுமட்டுமன்று. எழுத்திலக்கியப் புலவர்கள் பாடத்தயங்குகின்ற - ஒதுக்கிய - விடயங்கள் பற்றியும் பாடியிருக்கின்றனர். காலனித்துவ ஆட்சிக் கெதிராகவும் சுரண்டல்களுக்கு எதிராகவும் இன ஒடுக்கு முறைக்கு எதிராகவும் உரத்துக்குரல் கொடுத்தும் வந்துள்ளனர்.

அனைத்தையும் விட முக்கியமானது, இத்தகைய வாய்மொழிப்பாடல்களை பொதுமக்கள் கூடுமிடங்களிலே பாடி வந்திருப்பதாகும் பொது மக்களைக் கவர்வதற்கேற்ற விதத்திலே அவற்றை இசைப்பாடல்களாக பாடியிருப்பதும் சினிமா பாடல் மெட்டுக்களிலே அவற்றைக் கட்டியிருப்பதுமாகும்.

உ-ம்

- 'சொல்லட்டுமா? சொல்லட்டுமா' என்றமெட்டு
- 'பூ மாலையில்' எ.மெ.
- பராசக்தியில் ('ஆரியக் கூத்தடினாலும்' என்ற மெட்டு)
- 'மணப்பாரை மாடுகட்டி' என்ற இசை
- 'பாடு படுபவன் தொழிலாளி பணம் படைத்தவன் முதலாளி'
- 'என்னை யாரென' - மெ. பாலும்பழமும் திரை.

தமது நவீனகாவியமாம் பாஞ்சாலிசபதம் நூல் முகவுரையிலே பாரதியார் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதை யாமறிவோம்:

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்."

இவ்விடத்திலே நான் வற்புறுத்த விரும்புவதொன்றுண்டு.

'பொது ஜனங்கள் விரும்பும் மெட்டிலே ஓரிரண்டு வருஷ நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி பாடி வந்துள்ள முற்குறிப்பிட்ட வாய்மொழிப் புலவர்கள் முற்காலத்திலேயே இருந்துவந்துள்ளனர். பிற்காலத்திலும் மிருந்துள்ளனர் இக்காலத்திலு மிருக்கின்றர்' என்பதே அதுவாகும்

இவ்வாய் மொழிப்பாடல் மரபின் புதைவுகள் தொடர்ந்து தோண்டப்படுகின்றபோதுதான் - ஆய்வுக்குட்படும்போதுதான் - அவற்றின் சிறப்பு - வளம் - வலு ஆகியன துலங்குவதற்கான வாய்ப்புக்களுமுருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


- ஜெமீல், எஸ்.எச்.எம் (1995), **கிராமத்து இதயம்,** கலாசார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு
- யோகராசா, செ.கலாநிதி, தொகுப்பாசிரியர் (2002), **ஈழத்து வாய்மொழிப்பாடல் மரபு,** கிழக்கு மாகாணம், திருகோணமலை.
- வேங்கடாசலபதி, டாக்டர், ஆ.இரா (2004), **முச்சந்தி இலக்கியம்,** காலச்சுவடு பதிப்பகம் நாகர்கோயில்
- மு.சிவலிங்கம், தொகுப்பாசிரியர் (2007), **மலையகத் தமிழர் நாட்டுப்புறப்பாடல்கள்** (பல்வகைச்சேர்க்கை), குறிஞ்சித்தமிழ் இலக்கிய மன்றம் தொட்டகல.
- சிவலிங்காராசா, எஸ். போரசிரியர் (2010), **யாழ்ப்பாணத்தில் அரைவாய்மொழிப் பாடல்கள்,** பழைய மாணவர் சங்கம், யா.வேலாயும் மகாவித்தியாலயம், பருத்தித்துறை.
- லரீப் சுலைமான் (2011), **இறக்காமத்தூர் பண்பாட்டுப் பாடல்கள்,** கலாசாரப்பேரவை, பிரதேச செயலகம், இறக்காமம்.
- முத்துலிங்கம், பெ,தொகுப்பாசிரியர் (2012), **பரதேசம் போன தமிழர்களின் பரிதாப்பாடல்கள்,** கயல்கவின், சென்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரமான நூல் வெளியீட்டு நிறுவனம்

**மாருதாவின் மாருதம் :** (கவிதைத் தொகுதி)
எஸ். மாருதா
விலை ரூபா 100.00
(பிரதிகள் கைவசம் இல்லை)

**சமூக ஒழுங்கும் மாற்றமும் :**
கலாநிதி. வே. குணரத்தினம் (கி.ப)
கு.விக்னேஸ்வரன் (கி.ப)
விலை ரூபா 150.00
(பிரதிகள் கைவசம் இல்லை)

**விஞ்ஞான முறை** (Scientific Method): விலை. ரூபா 350.00
சிங்களம் மூலம் : பேராசிரியர். R.D. குணரத்ன
(பேராதனை வளாகம்)
தமிழ் மூலம் : மு. ரவி (சிரேஷ்ட விரிவுரையாளர், கி.ப)
(பிரதிகள் கைவசம் இல்லை)

முதற் பதிப்பு : Feb - 2011
இரண்டாம் பதிப்பு March : 2011

**அளவையியலும் விஞ்ஞானமுறையும் :**
மு. ரவி. (சிரேஷ்ட விரிவுரையாளர், கி.ப)
விலை 350.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து முச்சந்தி இலக்கியம்

## பேராசிரியர் செ. யோகராசா

தமிழில் அண்மைக் காலமாகவே கவனத்திற்குள்ளாகி வருகின்ற – முச்சந்தி இலக்கியம் முதலான பல பெயர்களால் அழைக்கப்படுகின்ற – புதியதொரு இலக்கியவகை சார்ந்த இந் நூல், ஈழத்து முச்சந்தி இலக்கியம் பற்றி அறிமுகம் செய்கின்ற முதல் நூல் என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது.



**செல்லையா யோகராசா (1949) :**

யாழ்ப்பாணத்தில் கரணவாய் கிரா்மத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழை விசேட துறையாகக் கொண்டு கொழும்பு பல்கலைக் கழகத்தில் (1968 – 1972) பேராசிரியர்கள் க. கைலாசபதி, பொ. பூலோகசிங்கம், ஆ. சதாசிவம் ஆகியோரிடம் கல்வி பயின்றவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்ளோமா (1982), பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை வழிகாட்டலில் முதுகலைமாணி (1991), பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் வழிகாட்டலில் கலாநிதி (1999), பட்டங்கள் பெற்றவர்.

ஆரம்பத்தில் சில வருடங்கள் (1976–1983) நு/ஹோல்புறுக் த.ம வித்தியாலயத்திலும், யா/விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் பட்டதாரி ஆசிரியராகப் பணி புரிந்து பின்னர் (1991) கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகி தற்போது தமிழ்த் துறைப் பேராசிரியராக விளங்குபவர்.

பாடசாலைக் காலங்களில் "கருணை யோகன்" என்ற பெயரில் கவிதை, சிறுகதை ஆகிய ஆக்க இலக்கியத் துறைகளிலீடுபட்டு பல்கலைக் கழகம் சென்ற பின்னர் முழு நேர ஆய்வாளராகத் தொழிற்படுபவர்.

ஈழத்து இலக்கியம், நவீன இலக்கியம், ஆய்வியல், நாட்டாரியல், இதழியல், சிறுவர் இலக்கியம், பெண்கள் இலக்கியம், கல்வியியல் முதலியன இவரது ஆய்வுப் புலங்கள். இவற்றில் புதிய தடங்கள் பதித்து வருபவர். இவைதொடர்பாக பல ஆய்வுக் கட்டுரைகள், சிலநூல்கள், பதிப்பு நூல்கள், தொகுப்பு நூல்கள் வெளியிட்டவர். உள்நாட்டு கருத்தரங்குகள் உட்பட பல சர்வதேசக் கருத்தரங்குகளிலும் பங்கு பற்றியவர். கற்றல், கற்பித்தல், ஆராய்தல் முதலான அறிவுத் தொழிற்பாடுகளில் தீராத ஆர்வத்துடன் ஈடுபடுவது இவர்தம் சிறப்பியல்பு.

**வி. மைக்கல் கொலின்**
**(ஆசிரியர் – மகுடம்)**

Wanasinghe Printers, Batticaloa. +94 (0) 65 222 7170 (WP1302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org